உ

# அருள் ஒளி



## ஈழத்துச் சிதம்பரம் திருக்கோவில் சிறப்பு மலர்

111

வெளியீடு :

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை


2016

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை



# தென்திசை வாயில் இராஜகோபுர
# அடிக்கல் நாட்டு விழா

**அம்பாள் அடியார்களே!**

திருவருட் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலயத்தின் தென் திசை வாயில் கோபுரத்திருப்பணி வேலை ஆரம்பிப்பதற்கு அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது. இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் கிரியைகள் எதிர்வரும் தை மாதம் 10 நாள் (24-01-2016) ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்நாளில் காலை 9.05 தொடக்கம் 9.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. இப்புனித கைங்கரியம் சிறக்க அடியார்கள் அனைவரும் வருகை தந்து அம்பாளின நல்லருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இராஜகோபுரத் திருப்பணிக்கு நிதியுதவி வழங்குபவர்கள் தேவஸ்தான அலுவலகத்தில் ஒப்படைத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெற்றிடலாம்

தொலைபேசி : 021-321 3151
தொலைநகல் : 021-224 1905
ஈ-மெயில் : thurkaiammantemple@gmail.com

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. ச. ஏழூர்நாயகம் அவர்கள்

தை மலர்
2016

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

## திருக்கோணேஸ்வர திருத்தலத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் துணை செய்யவேண்டும்

பாடல் பெற்ற பஞ்சஈஸ்வர தலங்களில் ஒன்றாகிய திருக்கோணேஸ்வரம் மிகவும் தொன்மையானது. இத் திருத்தலத்தை நன்முறையில் கட்டி எழுப்புவதற்கு இன்றைய அறங்காவலர் சபை பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர். எனினும், அம் முயற்சிகளுக்கு பல இடையூறுகளை சிலர் வழங்கி வருகின்றனர். குறிப்பாக அகழ்வாராய்ச்சி திணைக்களத்தை சார்ந்தவர்கள் கோயில் திருப்பணிகள் ஆரம்பிக்கின்ற வேளை தோறும் தடுத்து நிறுத்தும் செயலில் ஈடுபடுகின்றனர். இது சைவ மக்களுக்குப் பெரும் வேதனையைத் தந்துள்ளது. ஆலயத்துக்கு சொந்தமான நிலத்தைப் பெரும்பான்மை சமூகத்தை சார்ந்தவர்களும், கடற்படையினரும் பயன்படுத்தி வருகின்றனர்.

சைவ மக்கள் பல தடவை பலரிடம் முறையிட்டும் பயன் கிட்டவில்லை. கோவிலுக்குச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்தவர்கள் தற்காலிக கடைகளை ஆரம்பித்து அவற்றை நிரந்தர கடைகளாக மாற்றி வருகின்றனர். கடைச் சூழலிலேயே குடும்பம் குடும்பமாக வசிக்கத் தொடங்குகின்றனர். கோவிலுக்குச் செல்லுகின்ற அடியார்கள் மிகவும் சிரமத்திற்கு மத்தியில் வழிபாட்டிற்குச் சென்று வருகின்றனர். திருகோணமலை கோணேஸ்வர சுற்றாடலில் பெரிய பௌத்த

ஆலயம் அமைக்கப்பட்டு, மலையில் பெரியளவிலான புத்தர் சிலை சென்ற காலங்களில் வேகமாக அமைக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.

போர்த்துக்கேயர் முதல் ஆங்கிலேயர் வரை சைவத் தமிழர்களின் புராதன சொத்துக்களை சூறையாடியமையை வரலாறுகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. 1948ம் ஆண்டுக்குப் பின் திருக்கோணமலை நகரம் அணுவணுவாக சைவத் தமிழரிடம் இருந்து பறிக்கப்பட்டு வருவது மிகவும் வேதனைக்குரிய விடயம் ஆகும்.

இலங்கை தொல்லியல் அகழ்வாராய்ச்சி திணைக்களம் திருக்கோணேஸ்வரத்திலும் திருக்கேதீஸ்வரத்திலும் கட்டுமானப் பணிகள் செய்வதற்கு தங்கள் அனுமதியைப் பெறவேண்டுமென நிபந்தனை விதித்துள்ளது. இக்கோயில் சுற்றாடல்களில் பௌத்த மதக் கோயில்கள் தங்கு தடையின்றி கட்டப்பட்டு வருகின்றது. சமீபத்தில் திருக்கோணேஸ்வரத்தில் திருப்பணி வேலைக்காக நிலத்தைக் கிண்டியபோது அழகான விக்கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அந்நியரால் அழிக்கப்பட்ட எமது கோயில் சொத்துக்கள் மண்ணுக்கு இரைகாகிக் கொண்டிருக்கின்றன. தற்போது நில ஆராய்ச்சி செய்வதற்காக பல நவீன கருவிகளை அறிவியல் உலகம் தோற்றுவித்துள்ளது. நவீன கருவிகளைப் பயன்படுத்தி இக்கோயில்களின் சுற்றாடலில் உள்ள நிலத்தில் மறைக்கப்பட்டுள்ள விக்கிரகங்கள் மற்றும் புராதனப் பொருட்களை எடுத்துப் பாதுகாக்க வழி செய்யவேண்டும். இதை விடுத்து அழிந்த புராதனக் கோயில்களைக் கட்டுவதற்கு தொடர்ந்து தடைகளைப் போடுவது எவ்விதத்திலும் நியாயமான செயலன்று. இவ் விடயம் தொடர்பாக சகலரும் உரிய அக்கறை செலுத்த வேண்டும்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வர சுற்றாடலை ஆலய அறங்காவலரிடம் முழுமையாகக் கையளிக்க வேண்டும். ஆலயத் திருவீதி செப்பனிடப்பட்டு தேரோடும் வீதியாக மாற்றியமைக்க அனைவரும் துரிதமாக செயற்படவேண்டும்.

- ஆசிரியர்

# அறிவுப்புதையல் அ.ச.ஞானசம்பந்தன்

ஜெயநந்தனன் அவர்கள்

தளர்ந்துபோய், விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே கட்டிக்காத்து வந்த தமிழ், மீண்டும் தழைத்து வளர்ந்த காலம் 20ம் நூற்றாண்டு எனலாம். மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பங்களிப்பு அந்த மறுமலர்ச்சிக்கு முக்கிய மான காரணம் என்றாலும்,

- ♦ திருவாவடுதுறை ஆதீனம்
- ♦ அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
- ♦ திருநெல்வேலி சைவசித்தாந்தக் கழகம்

போன்றவை ஆதரித்த தமிழறிஞர்களும், அந்த மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்தனர். நாவல் இலக்கியத்தின் வளர்ச்சியும், பத்திரிகைகளும் கூடக் கணிசமான பங்களிப்பு நல்கின.

"தமிழ்த் தாத்தா" உ.வே.சாமிநாதய்யரின் பங்களிப்பும், சங்கத் தமிழ் இலக்கியங்களை அவர் தேடிப் பிடித்து அச்சில் பதிவாக்கித் தந்ததும் அளப்பரிய சாதனை. அதேபோல, வள்ளல் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் தோற்றுவித்த நான்காம் தமிழ்ச் சங்கமும் செந்தமிழ்க் கல்லூரியும் தமிழுக்கு மரியாதை தேடித் தந்தன. அண்ணாமலைப் பல்கலைக்கழகமோ, பல தமிழாராச்சியாளர்களை உருவாக்கி, தமிழுக்கும், தமிழனுக்கும் பெருமை தேடித் தந்தது.

அந்தத் தமிழ் மறுமலர்ச்சியின் காரணமாக நமக்குக் கிடைத்த மிகப்பெரிய அறிவுப் புயைதல்தான் செந்தமிழ் வித்தகர் அ.ச.ஞானசம்பந்தன். நண்பர்களாலும், தமிழார்வலர்களாலும் "அ.ச.ஞா." என்று அன்புடன் அழைக்கப்படும் இந்தத் தமிழ் அறிஞர், பிறக்கும்போதே தமிழுடன் ஒட்டிப் பிறந்தார் என்று சொன்னாலும் தகும். ஏறக்குறைய 35 ஆய்வு நூல்கள், 3 மொழி பெயர்ப்பு நூல்கள், எண்ணிலடங்காத இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி சொற்பொழிவுகள் என்று "அ.ச.ஞா." ஆற்றியிருக்கும் தமிழ்த் தொண்டை, தமிழ் உள்ளளவும் மறக்க இயலாது.

கல்லணையை அடுத்த அரசங்குடி, பல தமிழஞர்களின் வேடந்தாங்கலாக இருந்த காலமொன்று இருந்தது. அதற்குக் காரணம் அங்கே வாழ்ந்து வந்த "பெருஞ்சொல் விளக்கனார்" அ.மு.சரவண முதலியார் என்பவர். அவரும் அவரது இல்லக்கிழத்தி சிவகாமி அம்மையாரும் சைவ சமயப் பற்றும், தமிழ்ப் பண்பில் பிடிப்பும் கொண்டு வாழும் நல்லறத் தம்பதியர் "அ.மு.ச." என்று நண்பர்களால் அழைக்கப்பட்ட சரவண முதலியார் சாதாரணமானவர் அல்ல. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாருடன் இணைந்து திருவிளையாடற் புராணத்திற்கு உரை தீட்டியவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

20ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இன்றைய அளவுக்குக் கல்லூரிகளும், தமிழ் ஆராய்ச்சி சாலைகளும், நூலகங்களும் இல்லாத நேரம். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதற்கேற்ப, அறிஞர் பெருந்தகையர் "தமிழாட" தமிழார்வலர்கள் மற்றும் அறிஞர்களின் ஊருக்குச் சென்று

தங்கி, அவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் நடத்தி, தங்களது சந்தேகங்களைப் போக்கிக் கொண்டு தத்தம் ஊர்களுக்குத் திரும்புவது வழக்கம். அதேபோல, "அ.மு.ச."வைத் தேடித் தமிழ் அறிஞர்களும், புலவர்களும் அரசங்குடி வந்து தங்கி, தங்களது தமிழறிவை செம்மைப்படுத்திக் கொள்வது வழக்கம்.

இத்தனை பீடிகையும் எதற்கு என்று தானே கேட்கிறீர்கள்?

அத்தகைய தமிழ் ஆர்வலரின் மகனாக 10.11.1916இல் பிறந்தவர்தான் "அ.ச.ஞா." பிள்ளைப் பிராயத்திலேயே தமிழைச் சுவாசித்து வளர்ந்ததாலோ என்னவோ, பின்னாளில் அவர் தனது "தந்தையை விஞ்சிய தனயனாக" அனைவரும் போற்றும் தமிழறிஞராக வலம் வந்தார்.

"அ.ச.ஞா." வைத் தமிழ் தேடி வந்து பற்றிக்கொண்ட கதை மிகவும் சுவை யானது. 1935ல் லால்குடியில் தனது பள்ளிப் படிப்பை முடித்த "அ.ச.ஞா." தனது இடைநிலை வகுப்புக்காக அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அதிலும், கணிதம், இயற்பியல், வேதி யியல் ஆகியவை கற்று இடைநிலை வகுப்புத் தேர்விலும் வெற்றி பெற்றார். பட்டப்படிப்புக்கு அவர் எடுத்துக் கொண்ட பாடம் இயற்பியல். அதையும் அவர் விரும்பியேதான் ஏற்றதாகப் பின்னாளில் கூறியிருக்கிறார்.

அப்போது அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த நாவலர் சோமசுந்தர பாரதியாரின் கவனம் "அ.ச.ஞா." விடம் திரும்பியது. "அ.ச.ஞா."வின் இலக் கணத் தெளிவும், இலக்கிய அறிவும், அவரது தமிழின் ஆளுமையும் நாவலர் சோமசுந்தர பாரதியாரை அரச வைத்தது. தமிழுக்குக் கிடைக்கவேண்டிய அரிய பொக்கிஷ மொன்று. இயற்பியல் படிப்பதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அன்றைய ஆசிரியர்கள் மாணவர் களின் வழிகாட்டிகளாக இருந்தனர் என்பது மட்டுமல்ல, திறமைசாலிகளை அடை யாளம் கண்டு அவர்களுக்குச் சரியான வழியைக் காட்டுவது தங்களது கடமை என்றும் கருதினார்கள். "அ.ச.ஞா." விடம் தமிழ்த்துறைக்கு மாறிவிடுமாறு வேண்டு கோள் விடுத்தார் நாவலர். தனது தந்தை என்ன சொல்லுவாரோ என்கிற பயம் "அ.ச.ஞா."வுக்கு. ஒரு நாள் நாவலர் சோமசுந்தர பாரதியாரே அரசங்குடிக்குச் சென்றுவிட்டார். அதுமட்டுமல்ல. அ.ச.ஞா. வின் பெற்றோரின் சம்மதத்துடன் இரண் டாண்டு இயற்பியல் படித்து முடித்திருந்த அ.ச.ஞா.வை, தமிழுக்கு மாறச் செய்து முதுகலைப் பட்டமும் பெற வைத்துவிட்டார் அவர். அ.ச.ஞா.வின் அண்ணாமலைப் பல்கலைக்கழக வாழ்க்கையில் அவருக்குக் கிடைத்த இன்னொரு மிகப்பெரிய வரப் பிரசாதம், அப்போது அங்கே ஆங்கிலத் துறைத் தலைவராகப் பணியாற்றி வந்த "வெள்ளிநாக்குப் படைத்தவர்" என்று ஆங்கி லேயர்களால் பாராட்டப்பட்ட சீனிவாச சாஸ்திரியாரின் நெருக்கம். அவரது அன்பும், ஆதரவும் அ.ச.ஞா.வின் ஆங்கிலப் புலமை யைச் செழுமைப்படுத்தின எனலாம். பிற்காலத்தில் பல மொழிபெயர்ப்புகளில் அ.ச.ஞா. ஈடுபடுவதற்கு அந்த ஆங்கிலப் புலமை கைகொடுத்தது.

அவரது கல்லூரிப் பருவத்திலேயே, அ.ச.ஞா.வைக் கவர்ந்தவர்கள் "தமிழ்த்

தென்றல்" என்று அழைக்கப்பட்ட திரு.வி.கல்யாணசுந்தர முதலியாரும், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம்பிள்ளையும். திரு.வி.க.வைத் தனது குடும்ப நண்பராக மதித்தவர் அ.ச.ஞா. திரு.வி.கவின் மணிவிழா வுக்குத் தலைமை தாங்கியவர். அ.ச.ஞா. வின் துணைவியார் இராஜம்மாள்தான் என்று சொன்னால், அவர்களது உறவு எந்த அளவுக்கு நெருக்கமானதாக இருந்தது என்று புரிந்து கொள்ளலாம். திரு.வி.க. வைத் தனது குடும்ப நண்பராகக் கருதி னார் என்றால், தெ.பொ.மீ.யைத் தனது குருநாதர் என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் கொண்டார் அ.ச.ஞா.

சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறை, போற்றிப் பேசப்பட்டதற்கு அங்கே பணிபுரிந்த தமிழ் பேராசிரியர்கள் முக்கிய காரணம். 1942 முதல் 1956 வரை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறையில் "அ.ச.ஞா." பணியாற்றிய காலத்தில் பல தமிழ்ப் பணிகளை அவரால் மேற்கொள்ள முடிந்தது. அவரது மாணாக்கர்கள் பலர் தமிழாராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற உதவியதாலோ என்னவோ, அ.ச.ஞாவின் மாணவர்கள் என்று சொல்லிக் கொள்ப வர்களின் எண்ணிக்கையை எண்ணிவிட முடியாது என்ற நிலை ஏற்பட்டது.

1956 முதல் 1961 வரை "அ.ச.ஞா." இன்னொரு மிகப்பெரிய முயற்சியில் இறங்கினார். அகில இந்திய வானொலியில் பணியில் சேர்ந்த அவர், அதுவரை பண்டி தர்களால் மட்டுமே படிக்கப்பட்டு வந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்ப காவியம் போன்றவற்றை நாடக வடிவ மாக்கித் தமிழ்நாட்டில் பாமரர்களும் இந்த இலக்கியச் செல்வங்களைச் சுவைக்க வழிவகுத்தார்.

மதுரை பல்கலைக்கழகம் உருவாக்கப் பட்டு அதற்கு "தெ.பொ.மீ." துணைவேந்த ராகவும் நியமிக்கப்பட்டார். மதுரைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்துறைத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர் அ.ச.ஞா. தான் என்பதில் அவரது குருநாதருக்குச் சந்தேகம் இருக்கவில்லை. குருவின் கட்டளையை ஏற்று, 1970 முதல் 1973 வரை மதுரைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அ.ச.ஞா.வின் இறுதிக் காலம் சென்னையில் தான் கழிந்தது.

சென்னையிலும் அவரால் தமிழை விட்டுப் பிரிந்து இருக்க முடியுமா என்ன? சேக்கிழார் ஆராய்ச்சி மையம் மற்றும் கம்பன் கழகம் போன்றவை அவரது தமிழார்வத்துக்கு வடிகாலாக அமைந்தன. சங்க இலக்கியம் தொடங்கி, சைவ சித்தாந்தம் வரை "செந்தமிழ் வித்தகர்" அ.ச..ஞானசம்பந்தனுக்குத் தெரியாத தமிழ் இலக்கியமே இல்லை எனலாம். இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகள் இன்றும் பல முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர்களுக்குத் தூண்டுகோலாக இருக்கின்றன.

தனது 86வது வரை தமிழ்ப்பணி ஆற்றிய அ.ச.ஞா. 27.08.2002 அன்று காலமானபோது தமிழ் அழுதது!

தமிழ் இலக்கியம் தன்னைச் சுவைத்து இரசிக்கும் இரசிகனை இழந்தது! தமிழகம் ஒரு நல்ல தமிழ் அறிஞரின் இழப்பால் சற்றுத் துவண்டது.

*நன்றி : தமிழ்மணி (தினமணி)*

# சபாபதி நாவலர்

## தோற்றம்

இலங்கையின் வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தில் வடகோவை என்னும் ஊரில் 1846ஆம் ஆண்டில் சபாபதி நாவலர் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் சுயம்பு நாதப்பிள்ளை. தாயின் பெயர் தெய்வ யானை. சைவ வேளாளர் குலத்தினைச் சேர்ந்தவர். இவர் அக்காலப் புலவர்களில் சிறந்தவராகவும், சொல்வன்மை மிக்க கல்வியாளராகவும் விளங்கினார்.

## கல்வி

சபாபதியார் உரிய காலத்தில் கல்விப் பயிற்சிக்குப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப் பெற்றார். தொடக்கத்தில் பிரம்மஸ்ரீ ஜெகந் நாதையர் என்பார் அக்காலத்திலே வடகோவைப் பகுதியிலே வடமொழி, தமிழ் ஆகிய மொழிகளிலே சிறந்து இருந்தார். அவரிடம் சபாபதிப்பிள்ளை சில காலம் பயின்ற பின்னர் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் என்பவரிடம் தமிழையும், வடமொழியையும் கற்றார். அக்கால வழக்கப்படி ஆங்கிலத்தையும் நன்கு கற்றார்.

## தமிழ்நாட்டில் தொண்டு

கல்வி இவருக்கு எளிதாக வந்து எய்தியது. இவர் சிறந்த புலமை எய்தியதை அறிந்த ஆறுமுக நாவலர் தமிழ்நாட்டில் சிதம்பரத்தில் தம்மால் நிறுவப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராக இருக்குமாறு பணித்தார். அங்ஙனமே அப் பணியினை ஏற்று சில ஆண்டுகள் சபாபதி நாவலர் சிதம்பரத்தில் பணியாற்றினார். சிதம்பரத்தில் இருக்கையிலே "ஏம சபாநாத மான்மியம்" என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்துச் சிதம்பரம் சபாநாத புராணம் என்னும் பெயரில் 893 செய்யுட்கள் கொண்டதாக எழுதி 1895ஆம் ஆண்டு வெளியிட்டார்.

## அருளுரை பெறுதல்

அக்காலத்தில் திருவாவடுதுறையில் சுப்பிரமணிய தேசிகர் பதினாறாம் பட்டத்து ஆசிரியராக அமர்ந்திருந்தார். அவர் நூற்றுக்கணக்கான மாணவர்களைச் சேர்த்து தம்மிடத்தில் பாடங்கற்குமாறு செய்திருந்தார். அத்தேசிகருடைய பெருமைகளைக் கேள்வியுற்ற சபாபதி நாவலர், திருவாடுதுறையை அடைந்து, அத்தேசிகரிடம் அருளுரை பெற்று அவர்கள் முன்னிலையில் பன்னிரண்டு ஆண்டுகள் அறிவு நூல்களையெல்லாம் முறையாகக் கற்றுணர்ந்தார். இலக்கிய, இலக்கணங்களிலும், வேதாந்த சித்தாந்த நூல்களிலும் சிறந்த புலமையுடையவரானார்.

## நாவலர் என்னும் பட்டம்

சபாபதியார் புலமைப் பெற்ற பிறகு அவைகளில் சொற்பொழிவு செய்தலிலும் வல்லவரானார். சொல் வன்மையும், அவர்க்கு இயற்கையிலே அமைந்துவிட்டது. நாவன்மையுடையவர்க்கு, "நாவலர்" என்னும் பட்டம் அளிப்பது வழக்கம். ஆயின் அக் காலத்தில் ஆறுமுகநாவலர் ஒருவர் மட்டுமே, 'நாவலர்' என்னும் பட்டம் பெற்றிருந்தார். பிறகு இவருக்கும் அப் பட்டத்தைத் தந்தனர். திருவாவடுதுறையில் ஒரு பேரவையைக் கூட்டி இவரை சொற் பொழிவு ஆற்றச்

செய்து அப்பேரவையில் சுப்பிரமணிய தேசிகர், இவருக்கு 'நாவலர்' என்னும் சிறப்புப் பெயரை வழங்கி யருளினார்.

### சிவஞானபோதம்

சிவஞானபோதம் என்பது சிறந்த சைவ சித்தாந்த நூல் ஆகும். அதன் உரை "மாபாடியம்" என்று புகழ்ந்து கூறப்படுவது ஆகும். சிவஞானபோதமாபாடியம் என்னும் சைவ சித்தாந்த மெய்ஞ்ஞான நூல், சைவ சமயத்துக்கொரு 'முடிமணி' போன்று விளங்கும் சிறப்புடைய நூலாகும். இந்நூலினை ஆதீனத்தலைவர் தகுந்த அறிவும் பக்குவம் உடையவர்களைக் கண்டு அவர்களுக்கு மட்டுமே படிப்பதற்குக் கொடுப்பது வழக்கம். தேசிகரவர்கள் சபாபதி நாவலரிடம் கொண்டிருந்த நன்மதிப்பால் அந்நூலை சபாபதிக்கு நல்கிக் கற்றுணரச் செய்தார்.

### சொற்பொழிவுகள்

நாவலருடைய பேரறிவும், சொல்லாற்றலும் புலவர்களாலும் பாராட்டப் பெற்றன. கல்வியறிவோடு சொல்வன்மையும் ஒருவர்க்கு இருக்குமாயின் அது பொன்மலர் மணம் பெற்றது போலாகும் என்று அறிஞர் கூறுவர். தமிழ்நாடு முழுவதும் நாவலர் பகழ் பரவியது. ஆங்காங்கு உள்ளவர்கள் நாவலரையழைத்துச் சொற்பொழிவுகள் செய்யுமாறு செய்தனர். இவர் சைவ சமய வளர்ச்சியின் பொருட்டும் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டும் பல சொற்பொழிவுகள் செய்தார். சைவ சமயப் பெருமையை எல்லாரும் அறியுமாறு செய்தார். இராமநாதபுரம் சேதுபதி மன்னர், மதுரை ஆதீனத்துத் தலைவர், திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர், சூரியனார் கோயில் ஆதீனம் முத்துக்குமார தேசிக சுவாமிகள் முதலியோர் நாவலருடைய சமயத் தொண்டுகளை மிகவும் வியந்து பாராட்டிப் போற்றினார்கள்.

இவர் சென்னையில் தங்கியிருந்த போது திருமயிலை, திருவொற்றியூர், கந்தகோட்டம் முதலிய இடங்களில் சைவ சமயச் சொற்பொழிவுகள் பல செய்து சைவ சமயத்தின் தனிச் சிறப்பை எல்லாரும் உணருமாறு செய்தார்.

### நாவலரும், சேதுகாவலரும்

இராமநாதபுரத்துச் சேதுமன்னர் நாவலரின் கல்வித் திறமும் சொல்வன்மையும் கண்டு மிக்க மதிப்பு வைத்திருந்தார். நாவலர் சிதம்பரம் சென்றபோது, அங்கு சென்ற பாஸ்கர் சேதுபதி மன்னர் நாவலரைக் கண்டு உரையாடினார். அவர் தம்முடன் இராமநாதபுரத்துக்கு அழைத்துச் சென்று அரண்மனையில் தங்கச் செய்தார். சேது நாட்டில் சில காலம் தங்கியிருந்து சமயத்தொண்டு செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். நாவலர் அதற்கு இணங்கிச் சில திங்கள் அங்கே தங்கியிருந்தார். பிறகு மன்னரோடு உத்தரகோசமங்கை என்னும் ஊருக்குச் சென்றார். இறை வழிபாடு ஆற்றியபின் மன்னர் தலைமையில் நாவலர் வேத நெறி தழைத் தோங்க என்னும் பெரியபுராணச் செய்யுள் அடியைத் தலைப்பாகக் கொண்டு மிகச் சிறந்த ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அதன் பின்னர் மன்னரோடு பல திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டார். பின்னர்த் திருச்செந்தூர், தூத்துக்குடி, திருக்குற்றாலம் ஆகிய இடங்களுக்குச் சென்று வழிபட்டதோடு சொற்பொழிவும் நிகழ்த்தினார். அதன் பின்னர் அரசரும் நாவலரும் இராமநாதபுரத்தை அடைந்தனர்.

வேந்தர், நாவலர்க்குப் பாராட்டு விழா நடத்தி மூவாயிரம் பொற் காசுகள் நன்கொடை வழங்கினார். மேலும் வேண்டிய போது உதவி செய்வதாகவும் கூறினர். நாவலர் சேதுவேந்தரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்னையை அடைந்தார்.

**சபாபதி நாவலரின் மாணவர்கள்**

நாவலரிடத்தில் மாணவர் பலர் வந்து கல்வி கற்றுச் சிறப்படைந்தனர். அவர்களுள்

1. சிதம்பரம் அ. சோமசுந்தர முதலியார்
2. விழுப்புரம் இராமசாமி பிள்ளை
3. மாதகல் கார்த்திகேய முதலியார்
4. மயிலை சு. சிங்காரவேலு முதலியார்
5. மாவை விசுவநாத பிள்ளை
6. சிதம்பர சிவராமச் செட்டியார்
7. திருமயிலை பாலசுந்தர முதலியார்
8. கழிபுரம் சிப்பிரகாச பண்டிதர் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்

**இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்**

- ❖ 168 செய்யுட்களாலான ஏசு மத நிராகரணம் என்ற நூல் எழுதி கிறிஸ்தவக் கொள்கைகளை மறுத்தார்
- ❖ திருச்சிற்றம்பல யமக வந்தாதி
- ❖ திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
- ❖ மாவையந்தாதி
- ❖ நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்
- ❖ திராவிடப் பிரகாசிகை
- ❖ சென்னையில் அச்சகம் ஒன்றை நிறுவி அதிலிருந்து ஞானாமிர்தம் என்னும் இதழை வெளியிட்டார்.

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

- ▪ 893 செய்யுட்களைக் கொண்ட சிதம்பர சபாநாத பராணம் என்னும் நூலை இயற்றி 1895ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூல் ஏம சபாநாத மான்மியம் என்னும் வடமொழி நூலின் மொழிபெயர்ப்பாகும்.
- ▪ அப்பய்ய தீட்சிதர் என்பவர் இயற்றிய சிவகர்ணாமிர்தம் என்னும் வடமொழி நூலினைத் தமிழில் மொழிப் பெயர்த்து வெளியிட்டார்.
- ▪ வடமொழியில் இயற்றப்பெற்ற பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயணதாற் பரிய சங்கிரகம் என்னும் நூல்களையும், தமிழில் மொழிப்பெயர்த்தார்.
- ▪ இவ்விரு வடமொழி நூல்களும் மேற் கூறிய தீட்சிதரால் எழுதப்பட்டவையே ஆகும்.

**மறைவு**

இறுதிக் காலத்தில் நாவலர் சிதம்பரத்தில் தங்கியிருந்தார். அங்கும் சைவ சமயச் சொற்பொழிவுகள் பல செய்தார். பிறகு திருத்தில்லையில் தங்கிருந்த போது, 1903ஆம் ஆண்டில் தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் இயற்கை எய்தினார்.

**மேற்கோள்கள்**

1. பிறந்த ஆண்டு : சாலிவாகன சகாப்தம் 1766
2. யாழ்ப்பாணப் புலவர்கள், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆசிரியர், புலவர். சொ. முருகேச முதலியார்

**வெளி இணைப்புகள்**

- ▪ சுப்பிரமணிய தேசிகர் நிழற்படம் – (தமிழும் இணையம்)
- ▪ சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம் அவரது மருமகன் சிவகுருநாதன் 1955இல் பதிப்பித்தது நூலகம் திட்டம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# குன்றக்குடி அடிகளார்

அருள்நெறித் தமிழ் வளர்த்த அடிகளார்

சேதுபதி

"அடிகளார்" என்பது துறவியைக் குறிக்கும் ஒரு பழந்தமிழ்ச்சொல். எனினும், அப்பெயர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஒருவரையே குறிக்கும் சிறப்புப் பெயரானது தனி வரலாறு.

தமிழகத்துத் தஞ்சைத் தரணியில் மயிலாடுதுறையை அடுத்துள்ள திருவாளப் புத்தூருக்கு அருகிலுள்ள நடுத்திட்டு என்னும் கிராமத்தில் சீனிவாசப் பிள்ளை, சொர்ணத்தம்பாள் தம்பதிக்கு 1925ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் தேதி பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அரங்கநாதன். அவருக்கு முந்திப் பிறந்த சகோதரர் இருவர்; சகோதரி ஒருவர்.

அப்போது அவன், நான்காம் வகுப்பு பயிலும் சிறுவன். வழக்கறிஞரும், தமிழ்ப் பேராசிரியருமான "சொல்லின் செல்வர்" இரா.பி. சேதுப்பிள்ளையின் வீட்டில், அவரது அறையின் ஜன்னல் முன் நின்று தினம் ஒரு திருக்குறள் ஒப்பித்துக் காலணா பெறுவது அரங்கநாதனின் வழக்கம். இவ்வாறு அரங்கநாதனின் வாழ்வை உயர்த்திய திருக்குறள், பின்னாளில் அடிகளாரான அவருக்குப் பொதுநெறி ஆகியது. இதே போல, அரங்கநாதனின் பிஞ்சு உள்ளத்தில் தீண்டாமை விலக்கு உணர்வும், மனிதநேயப் பண்பும் குறிக்கோள்களாகப் பதியக் காரணமானவர் அருள்திரு விபுலானந்த அடிகள் ஆவார்.

பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த அரங்கநாதன், தருமபுர ஆதீனத்தில் கணக்கர் வேலை இருப்பதை அறிந்து 1944ஆம் ஆண்டு அப்பணியில் சேர்ந்தான். 1945 – 48 கால இடைவெளியில் முறைப்படி தமிழ் கற்று வித்துவான் ஆனதும் அங்கே தான் அத்திருமடத்தின் 25ஆவது பட்டமாக வீற்றிருந்த தவத்திரு சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அரங்கநாதனைத் துறவுக்கு ஆட்படுத்திக் கந்தசாமித் தம்பிரான் ஆக்கினார்கள்.

1945ஆம் ஆண்டு தருமபுர ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரானாக நியமனம் பெற்ற கந்தசாமித் தம்பிரான், சமயம் தொடர்பான பணிகளைத் திறம்பட ஆற்றினார். அவர் தருமையாதீனத்தின் சார்பில், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீன குருபூசை விழாவொன்றில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்ற சேர்ந்தது. கந்தசாமித் தம்பிரானின் நாவன்மையால் கவரப்பட்ட குன்றக்குடித் திருமட ஆதீனகர்த்தர் திருப்பெருந்திரு ஆறுமுக தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் முறைப்படி தருமையாதீனத்திடம் இசைவு பெற்றுத் தமது திருமடத்துக்கு ஆதீன இளவரசராகக் கந்தசாமித் தம்பிரானை ஆக்கினார்.

அப்போது தெய்வசிகாமணி "அருணாசல தேசிய பரமாச்சாரிய சுவாமிகள்" என்ற திருப்பெயரும் அவருக்குச் சூட்டப்பட்டது.

1949ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி ஆதீன இளவரசராகிய அவர், 1952 ஜூன் 16ஆம் தேதி முதல் அத்திருமடத்தின் தலைமைப் பொறுப்பேற்று, 45ஆவது

குருமகா சந்நிதானமாக விளங்கினார். பின்னர் தம் பணிகளால், அடிகளார் ஆகி, ஊர்ப்பெயர் இணைய, "குன்றக்குடி அடிகளார்" என்று மக்களால் சிறப்புடன் அழைக்கப்பட்டார். தவத்திரு அடிகளார் ஆதீனப் பொறுப்பேற்ற காலம், இந்து மதத்திற்கு மிகவும் சோதனையான காலம். இறைமறுப்புப் பிரசாரங்களால் தாக்குதலுக்கும், கண்டனத்துக்கும் உரியதாக இந்து மதம் ஆயிற்று. இதன் எதிர்கால விபரீதங்களை மனதில் எண்ணிய அடிகளார், காலத்திற்கேற்ப, இந்து மதத்தின் உன்னத சீலங்களைப் புரியவைக்கும் முயற்சியில் இறங்கினார். இதன் பொருட்டு 1952 ஆகஸ்ட் 11ஆம் தேதி சமயச் சான்றோர்களையும், பெருந் தமிழறிஞர்களையும் குன்றக்குடியில் ஒன்றுதிரட்டிப் பெரும் மாநாடு ஒன்றை நடத்தினார். அதன் விளைவாகத் தோன்றியதே "அருள்நெறித் திருக்கூட்டம்".

1954 ஜூலை 10ஆம் தேதி முதல் மாநாடு தேவகோட்டையில் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் நடைபெற்றது. பின்னர் முழு வீச்சோடு செயற்பட்ட இவ்வியக்கத்தின் கிளைகள் தமிழகம் மட்டுமல்லாது, இலங்கையிலும் கிளைத்தன. அதன் செயலாக்கப் பிரிவாக "அருள்நெறித் திருப்பணி" எனும் அமைப்பும் 1955 ஜூன் 10ஆம் தேதி கிளைத்தது. அப்போதைய தமிழக அரசின் துணையோடு தமிழ்நாடு "தெய்வீகப் பேரவை" எனும் அமைப்பு. 1966இல் முகிழ்த்தது. தருமை ஆதீன குருமகா சந்நிதானம் தலைமையேற்ற இப்பேரவையில் அவருக்குப் பின், 1969 முதல் 1976 வரை அடிகளால் தலைமையேற்று அரும்பணிகள் பல ஆற்றினார்.

பேச்சுக்கு நிகராக, எழுத்திலும் வல்லவரான அடிகளார், தம் வாழ்நாளில் ஏராளமான நூல்களை எழுதியதோடு,

- மணிமொழி
- தமிழகம்
- அருளோசை

முதலிய இதழ்களையும் நடத்தினார்.

அவர் தோற்றுவித்து, இன்றளவும் வந்து கொண்டிருக்கும் "மக்கள் சிந்தனை"யும், "அறிக அறிவியல்" இதழும் குறிப்பிடத்தக்கன.

தமது சமய, சமுதாயப் பிணைகள் மூலம் உலகை வலம்வந்த மகாசந்நிதானம், அடிகளார் ஒருவர்தாம்.

வெளிநாடுகள் பலவற்றுக்கும் சென்று வந்தார் அடிகளார். அவர் மேற்கொண்ட அந்த மேலைநாட்டுப் பயணங்கள், அவரைத் தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தூதுவராகவும், அங்குள்ள தமிழ் மக்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிபவராகவும் ஆக்கின. இவ்வாறு அவர் 1972இல் சோவியத்தில் மேற்கொண்ட பயணத்தின் விளைவாகத் தோன்றியதுதான் "குன்றக்குடி கிராமத்திட்டம்".

திருக்குறளின் ஆழத்தையும் அழகையும், செறிவையும் உள்வாங்கிய அடிகளாரின் எழுத்துகள் தமிழ் இலக்கிய உலகில் தனித்தன்மை கொண்டமைவன.

- திருவள்ளுவர்
- திருவள்ளுவர் காட்டும் அரசியல்.
- திருவள்ளுவர் காட்டும் அரசு.
- குறட்செல்வம்
- வாக்காளர்களுக்கு வள்ளுவர் தொடர்பான அறிவுரை.
- திருக்குறள் பேசுகிறது.
- குறள் நூறு.

ஆகியன அடிகளார் அருளிய திருக்குறள் தொடர்பான நூல்களாகும்.

சமய இலக்கியத்திற்கு அடிகளார் அளித்த கொடைகளாக அமைவன,

- அப்பர் விருந்து
- அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்
- திருவாசகத்தேன்
- தமிழமுது
- சமய இலக்கியங்கள்
- நாயன்மார் அடிச்சுவட்டில்

உள்ளிட்ட நூல்களாகும்.

ஆலய சமுதாய மையங்கள் என்னும் நூல், தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல். அந்த வரிசையில் வைத்துப் போற்றத்தக்க நூல், "நமது நிலையில் சமயம் சமுதாயம்". சமரச சமய நெறியாளர்களுக்கு உரிய ஆன்மீக இலக்கியமாக அடிகளார் அருளிய "திருவருட்சிந்தனை" நாள் வழிபாட்டுக்குரிய "தினசரி தியான நூல்".

பெரியபுராணத்தோடு, சிலப்பதிகாரத்தையும், கம்பராமாயணத்தையும் ஆராய்ந்து அடிகளார் எழுதிய நூல்கள்,

- சிலம்புநெறி
- கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்

ஆகியனவாகும்.

சங்க, சமய இலக்கியங்களோடு நின்றுவிடாமல் சமகால இலக்கியத்திலும் ஆழ்ந்த புலமையுடைய அடிகளார், "பாரதி யுகசந்தி", "பாரதிதாசனின் உலகம்" ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

அவர்தம் சிறுகதைகள், அறிவொளி இயக்கத்தின் மூலமாக மக்களைச் சென்றெய்தியது. அதுபோல் அடிகளார் அரங்கத் தலைமையேற்றுப் பாடிய கவிதைகள், "கவியரங்கில் அடிகளார்" என்னும் நூலாகியிருக்கிறது.

அவர்தம் சுயசரிதையென அமைவது, "மண்ணும் மனிதர்களும்" எனும் நூலாகும். சில நாடகங்களும் அடிகளாரால் எழுதப் பெற்று அரங்கேற்றம் ஆகியிருக்கின்றன.

சிறுபொழுதும் ஓய்வின்றி, உலக நலனுக்காகத் துடித்த அடிகளாரின் இதயம் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி தமது துடிப்பை நிறுத்திக் கொண்டது. ஆயினும் அவர் ஆற்றிய அருட்பணிகள், தொடங்கிய தூய இயக்கங்கள் இன்னும் தொடர்ந்து விரிந்து வளர்கின்றன. அவர்தம் நிறைவுக் காலத்தில் "தினமணி"யில் தொடராக வெளிவந்த "எங்கே போகிறோம்?" என்ற கட்டுரைகள் இன்றைக்கும் வழிகாட்டுவன.

*நன்றி : தினமணி*

## வழிபாடு

இதயத்திலிருந்து பகைமை எண்ணம் அனைத்தையும் நீக்கிவிட்டு அறச் செயல்களைச் செய்வதன் மூலம் என்னை வழிபடுவாய்.

**– பகவத் கீதை**

# ஏழைகளுக்கு வாழ்வளித்த அன்னை

செல்வி நாகேந்திரம் சர்வலோஜினி

*துர்க்காபுரம் மகளிர் இல்லம்*

**"ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"** என்ற வாக்கிற்கிணங்க தெய்வத்திருமகள் சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்றால் எம் போன்ற பல ஏழைகளுக்கு வாழ்வளித்த அன்னை என்று கூறின் மிகையில்லை.

எம் அன்னை அப்பாக்குட்டி தையற்பிள்ளை அவர்கள் 07-01-1925 அன்று ஏழைகளுக்கு வாழ்வு கொடுக்க பிறந்த செல்வப்புதல்வி ஆவார். இவரது பல் பரிமாணங்களைக் கொண்ட செயற்கரிய செயல்களில் முதன்மையானது துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற பெருவிருட்சமாகும்.

அந்த வகையில் அன்னை பல்வேறான அறப்பணிகள், சமூகப்பணிகள் ஆற்றியதில் தமிழர்கள் வாழும் உலகநாடுகள் முழுவதும் அறியாதவர்கள் எவரும் இல்லை.

"தவமும் தவமுடையார்க்காகும்"

இது வள்ளுவர் கூற்று. இது போன்றே புண்ணியமும் புண்ணியம் செய்தவருக்கே உரியதாகும். அன்னை அவர்கள் தனக்கென வாழாத பிறர்க்கென வாழ்ந்த பெருமாட்டி. அன்னையவர்களின் பெருவிருட்சம் 1982 ஆம் ஆண்டு மாசி மாதம் 3ம் திகதி ஒன்பது பெண் குழந்தைகளுடன் ஆரம்பமாகியது. இன்று 140 குழந்தைகளைத் தாங்கி பெருவிருட்சமாக மிளிர்கின்றது. அந்த வகையில் இவரது அறப்பணி ஆகிய பெருவிருட்சத்தில் ஐந்து வயதுக்கு மேற்பட்ட தாய் தந்தையை இழந்த அல்லது தந்தையை இழந்த அல்லது தாயை இழந்த மற்றும் வறுமையில் அல்லற்படும் பெண்குழந்தைகளை அரவணைத்த அன்னை இவர்.

மேலும் அன்னையினது அரவணைப்பால் அவரது பெருவிருட்சத்தில் வளர்ந்த பலர் இன்று பல கலைகளைக் கற்று பட்டதாரிகளாகவும், உலகம் போற்றும் செல்வங்களாகவும் மிளிர்கின்றனர். அது மட்டுமல்லாது அன்னை அவர்கள் தனது பிறந்தநாள் விழாவன்று தனது அறக்கொடையாக ஏழை மாணவர்களின் கல்வியை வளப்படுத்த நிதி அன்பளிப்புச் செய்து வந்தார். அப்பணி இன்றும் மறையாமல் இருந்து வருகின்றது. இப்பணி தொடர எம் ஐயா செஞ்சொற் செல்வரின் தளராத முயற்சியே எனக் கூறலாம்.

மேலும் அறப்பணிகள், சமூகப்பணிகள், சமயப்பணிகள் பல ஆற்றிய அன்னை எங்கள் தெய்வம் ஸ்ரீ துர்க்கையம்பாளின் கருவியாகச் செயற்பட்டு இந்த உலகில் தனக்கெனத் தனித்துவமான மகத்தான இடத்துடன் சரித்திரம் அமைத்து தன் அளவில்லாத பணிக்கு 15-06-2008 அன்று முற்றுப்புள்ளி வைத்து இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

இவரது பணிகள் முற்றுப்பெறவிடாது அவரது பணிகள் மேலும் நிலைபெறச் செய்ய எமது ஐயா செஞ்சொற்செல்வர் அயராது முன்னின்று செயற்படுத்தி வருகின்றார். அந்த வகையில் அன்னையின் பிறந்ததின விழாவாகிய இன்று அன்னையை வணங்குவதுடன் அன்னையின் ஆத்மா எங்களை என்றும் ஆசீர்வதிக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# சைவத்தமிழ் உலகின் வரலாற்று நாயகி எம் அன்னை

**செல்வி பிரசா விஜயகுமார்**
*துர்க்காபுரம் மகளிர் இல்லம்*

சைவ உலகின் தனிப்பெரும் தலைவியான சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அன்னை நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சொற்பொழிவுப் பணி, எழுத்துப்பணி, ஆலய அறங்காவலர் பணி முதல் தாய் தந்தையரை இழந்த குழந்தைகளுக்கும், உறவினர்களாலும், பிள்ளைகளாலும் கைவிடப்பட்ட முதியோருக்கும் வாழ்வளிக்கும் மக்கள் பணி என்பவைகளைச் சிறப்பாகச் செய்து எம்மண்ணின் வரலாற்றிலே தடம்பதித்த ஒரு பெண்ணாக மிளிர்பவர் எமது சிவத்தமிழ்ச்செல்வி அம்மா என்றால் மிகையாகாது.

"எம் பிறப்பு ஓர் சம்பவமாக இருந்தாலும் எம் இறப்பு ஒரு சரித்திரமாக அமையவேண்டும்" என்ற இந்திய மாமேதை அப்துல் கலாமின் வாக்கிற்கிணங்க ஒரு சரித்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் எம் அன்னையாவார். யாழ்ப்பாண மாவட்டத்திலே தெல்லிப்பழை என்னும் கிராமத்திலே 1925ஆம் ஆண்டு தை மாதம் ஏழாம் திகதி அப்பாக்குட்டி தையல்நாயகி தம்பதியருக்கு மகளாக அவதரித்த அன்னை அவர்கள் 2008ஆம் ஆண்டு தான் இறைபதம் அடையும் வரையான காலப்பகுதி வரை எமது சைவத்தமிழ் உலகிற்கு பாரிய அளவு அறப்பணிகளை மேற்கொண்ட ஓர் தெய்வத் தாயாக மிளிர்கின்றார்.

அன்னை அவர்கள் அன்பு நெறியில் நின்று ஆசிரியப்பணி, சைவசமயப்பணி, செந்தமிழ்ப்பணி, ஆலயப்பணி, சமூகப்பணி போன்ற அரும்பணிகளை ஆற்றி தொண்டின் திருவுருவமாக மக்கள் மனதிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார். எம்மண்ணிலே நாவலர் பெருமானால் தொடக்கிவைக்கப்பட்ட பிரசங்க மரபினை தம் வாழ் நாளில் திறம்பட பேணி வளர்த்தவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்களாவார். இவர் இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற பிறநாடுகளிலும் தனது நாவன்மையால் பல சொற்பொழிவுகளை ஆற்றி அனைவரதும் பாராட்டைப்பெற்றுக் கொண்டார். சொற்பொழிவுகளை நடாத்தியது மட்டுமல்லாது எளிமையான தமிழ் நடையில் சுவைபட பல நூல்களையும் எழுதி வெளியிட்டு இதற்கான பல விருதுகளையும் அம்மா பெற்றுக் கொண்டார்.

தெல்லியூரில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அறங்காவலர் சபையின் தலைவராக விளங்கிய அன்னை அக்குழுவினர் வழங்கிய ஒத்துழைப்புடன் பல அறப்பணிகளை மேற்கொண்டார். அப்பணிகளே சைவ உலகில் பெரும் சாதனையாகத் திகழ்கின்றது. ஆலயம் என்பது மக்கள்

வழிபடுவதற்கு உரிய இடமாக மட்டுமல்லாது மக்கள் வாழ்வில் சகல துறைகளிலும் தொடர்புபட்டிருக்கவேண்டும் என்பதற்கு அன்னையால் நிர்வகிக்கப்பட்ட ஆலயமான துர்க்காதேவி தேவஸ்தானம் முன்னுதாரணமாக விளங்குகின்றது. இவ்வாலயமானது கதியற்றவர்களுக்கு புகலிடமாகவும் ஏழைகளின் கண்ணீர் துடைக்கும் கருணையில்லமாகவும் அமையவேண்டும் என்ற தூர நோக்குடன் அன்னையவர்கள் கோயிலை நடாத்தி வந்தார்.

இவ்வாறு அவரது தூரநோக்குச் சிந்தனையில் உதித்த பெருவிருட்சமே துர்க்காபுரம் மகளிர் இல்லமாகும். "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு தாய் தந்தையரை இழந்த அல்லது வறுமையால் வாடுகின்ற குழந்தைகளின் எதிர்கால வாழ்வு ஒளிமயமாக ஒன்பது குழந்தைகளுடன் இவ்வில்லத்தை ஆரம்பித்து வைத்தார். தற்போது 140 பிள்ளைகளைக் கொண்ட இவ்வில்லமானது தற்போதைய எம் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஐயா அவர்களின் கீழ் பெருவிருட்சமாக வளர்ந்து வருகின்றது. அத்துடன் அம்மா அவர்கள் வயதில் மூத்தவர்களைப் பராமரிப்பதற்காக சிவத்தமிழ்ச்செல்வி அன்னையர் இல்லம் என்ற இல்லத்தையும் ஆரம்பித்து வைத்தார். இவ் இல்லத்தில் தற்போதும் அன்னையர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாது எமது சைவசமய நூல்கள் அழிந்து போகாவண்ணம் அவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்காக 2001ம் ஆண்டு சிவத்தமிழ்ச்செல்வி ஆய்வு நூலகம் ஒன்றையும் தாபித்து பல அரிய நூல்கள் அழிந்துபோகாமல் காப்பதற்கு வழிவகுத்தார். இவ்வாறு அன்னை அவர்கள் இந்து சமயத்திற்குச் செய்த சேவை அளப்பரியதாகும். சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்கள் சைவத்தமிழ் உலகம் செய்த புண்ணிய பயனாய் தோன்றிய தெய்வத் திருமகளாக விளங்குகின்றார். சைவத்தமிழ் வரலாற்றிலே தொண்டாற்றிய பெண்மணிகள் வரிசையிலே அன்னையும் ஒருவராகப் போற்றப்படுகின்றார்.

துர்க்காதுரந்தரி கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் சைவத்தமிழ் உலகின் வரலாற்று நாயகியாகப் போற்றப்படக்கூடிய சிறப்புக்கள் நிறைந்தவர். அன்னை அவர்கள் ஆற்றிய பன்முகத் தொண்டுகளை சைவ உலகம் பாராட்டிப் போற்றுகின்றது. அவர் வாழ்ந்து காட்டிய நன்னெறியைப் பின்பற்றி அவர் வழி நடப்போமாக.

# சேர். பொன் இராமநாதன் அவர்களின் கல்விப் பணிகள்

திரு. க. குமரன் அவர்கள்

19ஆம் நூற்றாண்டின் பிற்கூற்றிலே இலங்கை மக்களின் கல்வித் தேவைகள் மிகுதியும் உணரப்பட்டன. கீழ்த்திசையின் ஆத்மஞானமும் ஒன்றிணைந்த சிறந்த தொரு கல்வியின் மூலம் மக்களின் சிந்தனையையும், வாழ்க்கைத் தரத்தினை யும் உயர்த்திவிடக் கோ்ணல் ஒல்கொட், அநாகரிக தர்மபாலா, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலானோர் பெரிதும் முயன்றனர். இவர்களின் வரிசையில் இராமநாதனையும் நாம் வைக்கலாம்.

## கல்லூரிகள் இரண்டினைத் தாபித்தல்

இராமநாதன் வாய்ச்சொல் வீரர் அல்லர்; அவர் செயல் வீரர். அவரின் செயல் வீரத்திற்கு எடுத்துக் காட்டுக்களே மருத னார்மடத்தில் அமைக்கப்பெற்ற இராம நாதன் மகளிர் கல்லூரியும் (1913), திரு நெல்வேலியில் அமைக்கப்பெற்ற பரமேஸ் வரக் கல்லூரியும் (1919) ஆகும். 'திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்' என்னும் மகுட வாசகத்தைத் தொண்டி யங்கிய இக்கல்லூரிகள் பயன்பெற அவற் றுக்கு கிளிநொச்சியில் பல ஏக்கர்களுக்கு நெற்காணிகளும் வாங்கிக் கொடுத்தார். பரமேசுவரக் கல்லூரி 1974-10-06 தொடக்கம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக இயங்கத் தொடங் கியது. இலங்கையின் வடபகுதியிலே, பல்கலைக்கழகமொன்று அமைத்தல் வேண்டும் என்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் கனவு இவ்வாறு நிறைவேறியது எனலாம்.

சமயம் என்பது ஏட்டளவிலே கற்று, பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைவதற் குரிய ஒரு பாடம் அன்று. அது நடை முறையில் கைக்கொள்ளப்படவேண்டிய ஒன்று என இராமநாதன் நினைத்ததால் தாம் கட்டிய கல்லூரிகளில் ஆலயங் களையும் அமைத்தார்.

தமிழ்ப் பெருவேந்தர்களின் ஆலயத் திருப்பணியைப் பின்பற்றிப் பொன்னம் பலவாணேசர் ஆலயத்தைக் கட்டிய இராமநாதன் தமது வித்தியாலயங்களிலும் ஆலயங்களைக் கட்டி எழுப்பினார்.

'பரமேஸ்வரக் கல்லூரி மாணவரின் இலட்சியங்கள்' என்ற சிறு நூலிலே இராமநாதன் குறிப்பிடுவனவற்றை நோக்கினார், அவர் கொண்டிருந்த கல்வியிலக்கு நன்கு புலனாகும்.

பரமேஸ்வரக் கல்லூரி, இந்திய ஞானிகளின் ஞானத்தோடு தமிழ், சங்கத இலக்கியச் செல்வங்களும் இணைந்து பிரித்தானியரின் மிகச் சிறந்த கல்விப் பாங்கினைத் தமிழ்ச் சிறுவர் பெறக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தவெனத் தாபிக்கப்பட்டது. இக்கல்வியால், தீயவன் நல்லவனாய் மாறும் நன்மை ஏற்படும். குறும்பு களாலும், வல்லுணர்ச்சிகளாலும் உந்தப்படுபவன், அவற்றினை அடக்கி நற்பணிகளுக்கு உதவு வோனாவான். மந்தை போலச் சோம்பி, வேலையற்று உழல்பவன் அத்தகைய தீமையிலே தோயாதவரை ஊக்கமுடையோனாயும் பிறர் நலம் கருதுவோனாயும் மாறுவான். முரடனாயும், ஆபாசச் செயல்களில் ஈடுபடுபவனாயும் இருப்பவன்

சீர்திருத்தப்படுவான். குறுகிய மனப்பான்மையும் வெறுப்பும் உடையோன் அனுதாபமும், சகிப்பு மனப்பான்மையும் எய்தப்பெறுவான். ஒரு பிரச்சினையையோ, அதன் வளர்ச்சியையோ அறிந்து தீர்க்க இயலாதவன் அவற்றை உடனடியாக இனங்கண்டு கொண்டு அவற்றின் காரணங்களை ஆராய்ந்து, பரிகாரந் தேடும் வழிவகைகளை அறிந்து நலம் வளர்க்கும் பணிகளிலே ஈடுபடுவான்.

கல்வியின் மூலம் உள்ளச் சமநிலை பெற்ற உயர் மதனை உருவாக்கலாம் என்று நம்பிச் செயலாற்றிய இராமநாதன், பெண்களும் தாம் கற்கும் கல்வியின் பண்பும் பயனும் வாய்ந்த உயர் மக்களாய் விளங்க வேண்டும் என்ற அவாவினையும் கொண்டிருந்தார். அந்த அவாவினால் உந்தப்பட்ட நிலையிலேயே அவர் பரமேஸ்வரக் கல்லூரியை அமைப்பதற்கு முன்னரே இராமநாதன் மகளிர் கல்லூரியை அமைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார் :

**இந்துப் பிள்ளைகளுக்கு இலௌகிகமும் ஆன்மீகமும் இணைந்ததான கல்வியினை அளிப்பதற்குகந்த கல்லூரி ஒன்றினை அமைக்கும் எண்ணம் என் உள்ளத்தில் நெடுங்காலமாய் இருந்து வந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியினைக் கொழும்பிலே அமைப்பதனால் அங்கு திரள் திரளாக இலங்கையின் பல பாகங்களிலிருந்து வந்து குவியும் இந்துச் சிறுவர்களை அவர்களின் சமயத்திற்கு முரணான போக்குகளிலும், சிற்றின்பப் போக்குகளிலும், தேசிய முரண்பாட்டுச் செயல்களிலுமிருந்து மறப்பினை ஏற்படுத்தலாம் என்று கருதினேன். ஆனால், மூன்று ஆண்டுகளின் முன் நான் யாழ்ப்பாணத்திற்கு வருகை புரிந்த பொழுது இங்கு சிறுவர்களிலும் சிறுமியர்களின் நிலையே கொழும்பில் உள்ளதிலும் பயங்கரமாக இருக்கக் கண்டேன்.**

**யாழ்ப்பாணத்துச் சிறுவர்களுக்கெனச் சைவக் கோட்பாடுகளின் அடிப்படையில் நடைபெறும் உயர் பள்ளிகள் பல இருந்தன. ஆனால், சிறுமிகளோ ஒன்று கிறிஸ்தவக் கல்லூரிகளில் நுழைவனுமதி பெறல் வேண்டும், அல்லதுத தங்கள் படிப்பினைப் புறக்கணித்து வீடுகளிலே படிப்பின்றி இருத்தல் வேண்டும். இவர்களின் பெற்றோர் கிறிஸ்தவப் பள்ளிகளுக்குச் செல்லும் தம் பிள்ளைகளுடைய உள்ளங்களில் ஏற்படும் நஞ்சு பற்றிப் பெரிதும் வருந்துவதையும், கண்டன முறையீடுகள் செய்வதையும் என்னாற் காணமுடிந்தது. எனவே, இந்தத் துன்பநிலையினை, சிறியோரும் வளர்ந்தோருமான இந்து மாணவிகளுக்குத் தகுந்ததும், போதியதுமான பெரியதொரு கல்லூரியை அமைப்பதன் மூலம் போக்கி, அவர்களின் உலக வாழ்வினில் ஆன்ம திருப்தியை ஏற்படுத்தலாம் என்று தீர்மானித்தேன்.**

மேலும், இராமநாதன் மகளிர் கல்லூரியின் கல்விப் பணியினைப் பரவலாக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். திக்கற்ற சைவச் சிறுமிகள் கல்விபெற அவர் அமைத்த குருகுலம் எனப்படும் அனாதைகள் விடுதி சைவப் பிள்ளைகளின் முதல் விடுதியாகும். அத்துடன் கல்லூரியின் விழுமியங்கள் திக்கெல்லாம் செழிப்புற வேண்டும் என்னும் நோக்கில் கல்லூரியில் கற்ற பழைய மாணவர் மத்தியில் சைவ மங்கையர் சபையினையும் நிறுவினார்.

**இராமநாதன் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை**

இராமநாதனின் கல்விப் பணிக்கு பிறிதோர் எடுத்துக் காட்டாய் அமைவது அவர் நிறுவிய சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையும் (1926) அதன் உறுப்பாகிய பயிற்சிப் பாடசாலையுமாகும். இவ்வா

சிரிய கலாசாலையே இலங்கையின் முதற் சைவப் பெண்கள் ஆசிரிய கலா சாலையாகும்.

## அரசின் கல்விப் பங்களிப்பை வலியுறுத்தல்

தமது செல்வத்தையும், உயர்நிலையினையும் உறுதுணையாகக் கொண்டு இராமநாதன் யாழ்ப்பாணத்திலேயே கல்லூரிகளை அமைத்தனரெனினும், தேசிய ரீதியில் எல்லா மக்களும் கல்வி பெறுவதற்கு அரசாங்கமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தவும் அதற்காகப் போராடவும் தவறவில்லை.

1881ஆம் ஆண்டுக் கல்விக்கென ஒதுக்கீடு செய்யவேண்டிய நிதியினை, அக்காலப் பொதுக்கல்வி இயக்குநரினாலே தயாரிக்கப்பட்ட உதவி நிதி பெறும் பாடசாலைகளுக்கான திருத்தச் சட்டத்திற்கு அனுகூலமான வகையில் ஒதுக்கல் வேண்டும் என்று அந்நாட்டு குடியேற்றக் காரியதரிசி 1880ஆம் அண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி ஒரு பிரேரணையைச் சட்டநிரூபணச் சபைக் கூட்டத்திலே பிரேரித்தார். இதனால், புதியனவாக இலங்கையின் பல பாகங்களிலும் தோன்றிக் கொண்டிருந்த பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்படுமென்பதையும் ஆரம்பக் கல்வி பெறும் வாய்ப்பினைக்கூட இந்நாட்டுச் சிறுவர்கள் இழப்பர் என்பதனையும் இராமநாதன் உணர்ந்து, மாணவர் வரவுச் சராசரியின் அடிப்படையில் உதவி நிதி வழங்கும் சரத்துக்குத் திருத்தப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். இத்திருத்தமானது சர்வசனக் கல்விக்குப் பெரிதும் உகந்ததாயிருந்தது. குடியேற்றக் காரியதரிசி திரு. ஜோன் டக்ளஸ் அவர்களின் பிரேரணையைத் திருத்துமாறு கோரி, இராமநாதன் 1880ஆம் அண்டு ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினார். “கல்வி வளர்ச்சியிலே நான் எப்பொழுதும் ஆழமான ஈடுபாடு கொண்டவன்” எனத் தொடங்கி, அவர் ஆற்றிய பின்வரும் உரையில் அரசாங்கத்தின் கடமையினை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார் :

**பொதுமக்களுக்கு வேண்டிய கல்வியினை அரசாங்கம் கொடுத்தல் வேண்டும் என்ற கோட்பாட்டினை ஒத்த எந்தக் கோட்பாடும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாயில்லை. எத்தனை தலைமுறை செல்லினும் மக்களுக்கு வேண்டிய பண்பாட்டை இக்கல்வியால் அளித்துவிடலாம் என்பது இயலாத காரியம். ஆனால், அவர்கள் தமக்குரிய வாழ்க்கை நிலை களில் தம் கருமங்களைத் திறம்பட நடத்துவதற்கான கல்வி வழங்கப்படல் வேண்டும். எமது கடந்த கால ஆட்சியாளர்களின் கல்வி இலட்சியமும் இவ்வகையிலே தான் இருந்தது.**

இராமநாதன் தமது காலத்திலே வழங்கப்பட்ட ஆரம்பக் கல்வி – சுயபாஷைக் கல்வி – மிகவும் குறைபாடுடையதாய் இருக்கக் கண்டார். இதனைப் போக்குவதற்கு ஆங்கிலப் பாடநூல்கள் சிலவாயினும் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என்றும், இம்மொழிபெயர்ப்புக்களைச் செய்வோரை இந்தியாவிற் சன்மானம் அளித்து ஊக்குவிப்பது போல இங்கும் ஊக்குவித்தல் அரசாங்கத்தின் கடமையென்றும், 1879ஆம் ஆண்டிலேயே சட்டநிரூபண சபையில் அவர் எடுத்துரைத்தார். இம்மொழிபெயர்ப்பு நூல்கள் சிறப்பாக ஆரம்ப விஞ்ஞான

அறிவினையும், ஒழுக்கவியலையும் மாண வர்க்கு அறிவுறுத்துவனவாய் இருத்தல் வேண்டும் என்பது அவரது நோக்கமாய் இருந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்று வதற்கு உகந்த நூல்கள் சிலவற்றையும் அவர் தமது பேச்சிலே சுட்டிக்காட்டினார்.

சிங்கள, தமிழ் மாணவர் பண்பு நலத்திலே தான் குறைபாடுடையவர்களாய் விளங்குகின்றனர். எனவே, இவர்களின் பண்புநல அபிவிருத்தியை அரசு குறிக்கொண்டு ஆவன செய்தல் வேண்டும். இந்நாட்டின் இளைஞர் சமுதாயம், துவேஷமின்றியும், ஒருதலைச் சார்பின்றியும், சபலம் இன்றியும், உயர்வாக சிந்திப்பதற்கு அவர்களை ஆயத்தம் செய்தல் வேண்டும்.

மாணவரின் பண்பு நலத்தை அபி விருத்தி செய்வதற்கு ஆங்கில ஒழுக்க வியல் நூடல்களை மொழிபெயர்த்தல் வேண்டும் என்று குறிப்பிட்ட இராமநாதன், தமிழிலுள்ள அற நூல்கள் இரண்டின் சில பகுதிகளுக்கு விளக்கமும் எழுதியுள்ளார். 'ஔவை நாயகியின் ஆத்திசூடி மந்திர விளக்கம்', 'திருக்குறட் பாயிரமும் இராம நாதீயமும்' என்பனவே அவ்விரண்டு நூல்களுமாகும்.

ஏகாதிபத்திய ஆட்சி நிலவிய காலத்தில், கல்வியின் நோக்கம் அரசாங் கத்திற்கு உண்மையாய் நடந்து கொள்ளும் உத்தியோகத்தர் வகுப்பொன்றினை உற்பத்தி செய்வதாகவே இருந்தது. இவ்வாறு உற்பத்தி செய்யும் பொழுது இதற்காகப் பெருந்தொகைப் பணத்தினைச் செலவு செய்வதையும் அவ்வேகாதிபத்தியம் விரும்பவில்லை. இந்நிலையில் இராம நாதன் கல்வியின் நோக்கம் இவ்வளவு குறுகியதாக இருக்கவேண்டியதில்லை என்பதையும், அதற்குச் செலவு செய்வதில் அதிக உலோபம் காட்டுதல் தவறு என்பதை யும் ஆட்சியாளர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

கல்வியின் பிரதிபலன் பவுன் – சிலிங் – பென்ஸில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை என்பதை ஒரு சிலருக்கு அறிவுறுத்தி, அவர்களை ஒப்புக்கொள்ள வைப்பது எளிதாய் இல்லை. இவர்கள் கல்விக்கென 1867இற் செலவாகும் பணம் 1868இலோ, அல்லது 1869இலோ திரும்பக் கிடைத்துவிடல் வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். நான் கல்வியின் பயன்களிற் சமூக, அரசியல் முன்னேற்றங்களே பிரதானமானவை எனக் கருதுகின்றேன். கல்வி பெற்று உலகிடையே செல்லும் ஒவ்வொருவனும் மக்களிடையே ஒரு சக்தியாய் விளங்கி, அவர்கள் மீது தன் செல்வாக்கினைப் பதிந்து விடுகின்றான். இவ்வாறு பதிந்தவை அவன் தன்னிலும் கல்வி குறைந்தோருடன் உரையாடுகையில் அவர்களின் அறிவை அபிவிருத்தியடையச் செய்கின்றான். இவ்வபிவிருத்தி படிப்படியாகவும், பலாத்காரமின்றியும் அவர்களின் நடத்தையை மாற்றியமைத்து விடுகின்றன.

கல்வி வாய்ப்புப் பெறுவதில் ஏழை என்றும், செல்வர் என்றும் வேறுபாடு இருத்தல் கூடாது எனவும், இக்கல்வி வாய்ப்பினை அரசாங்கமும் பாரபட்சம் இன்றி யாவர்க்கும் வழங்கவேண்டும் எனவும் பாடுபட்டதோடமையாது, தாமே இரு பெரிய கல்விக் கூடங்களையும் நிறுவி வழிகாட்டிய வகையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் இந்நாட்டின் கல்வித் துறைக்கு மாபெரும் பணியாற்றியுள்ளார்.

*நன்றி – குமரன் புத்தக இல்லம்*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# தொண்டு

வே. தனபாலசிங்கம் அவர்கள்

தொண்டு என்பது தன்னலம் கருதாமல், புக்ழை விரும்பாமல், பணம் சேர்க்கும் நோக்கம் இல்லாமல் நீதி நெறி நின்று பணி செய்தலாகும். தொண்டு செய்பவரைத் தொண்டர் என்று மக்கள் அழைக்கின்றனர்.

தொண்டு பல துறைகளில் அல்லது பல வழிகளில் நடைபெறுகின்றது. ஆத்மீகம் – சமய ரீதியாக சமாதானம், அநாதைகள் ஆதரிப்பு, முதியோரைப் பேணல், ஈகை இவை போன்ற மக்களுக்குத் தேவையை அறிந்து செய்யும் செயல்களாகும்.

எனது எண்பத்து மூன்றாவது வயதில், சுமார் அறுபத்தைந்து வயது அனுபவத்தில் கண்ணால் கண்ட தொண்டர்கள் பற்றி முதலில் எழுதுகின்றேன். யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் வாசித்த செய்தி தருகின்றேன். மாருதப்பிரவாக வல்லி தனது நோய் நீங்கி இளமையும் அழகும் உடையவளாக விளங்கிய காலத்தில் தங்கிய இடம் தல்லிப்பள்ளி என்னும் சிற்றூர். இது தான் தெல்லிப்பழை என்றும் எழுதப்பட்டுள்ளது. இந்தத் தெல்லியூரில் துர்க்கா அம்மன் கோயில் எனது சிறு வயதில் இருந்த நிலையையும் இன்று உள்ள நிலையையும் சிந்திக் கின்றேன். துர்க்காபுரம் என்ற ஒரு புனித இடம் பிரகாசிக்கின்றது. கோயில் கட்டிட வளர்ச்சி – மண்டபங்கள், அநாதைப் பிள்ளைகளின் இருப்பிடம், அவர்களின் கல்வி வளர்ச்சி, கோயிலைச் சூழ்ந்த காணியின் விலாசம், ஆலய வழிபாட்டு முறைகள், மகேசுவர பூசை, விழாக்கள், சமூக நன்மைக்காக நிகழும் வைபவங்கள், அறக்கொடை எல்லாவற்றையும் தொகுத்து நோக்கினால் அமரர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தொண்டு எம்மால் அளவிடமுடியாத தொண்டு "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது" என்றார் ஔவை.

காலஞ்சென்ற வித்தியாதரிசி திரு. தியாகராசா, மகாசனக் கல்லூரியின் அதிபர் ஐயரத்தினம் ஆகியோரின் வழிகாட்டலில் அம்மாவின் பணி சைவத் தமிழர்கள் உள்ளவரை மறக்கமுடியாத பெரிய தொண்டு அம்மாவின் நிர்வாகத் திறமை, மாசில்லாமனம், கனிவான கருத்துள்ள சொற்பொழிவுகள் கற்றோரும், கல்லாதோரும் வியக்கத்தக்க அளவில் இருந்தன. பாரதியார் கவிதையில் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்றார். யான் சொல்லுகின்றேன் – "செல்வி தங்கம்மாவைச் சைவத்தமிழ் உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தெல்லிப்பழை" அம்மா அவர்கள் இல்லறம் ஓம்புவதற்குப் பிறக்கவில்லை. ஒரு தெய்வமாகக் காட்சியளிக்கவும், சமய நெறியில் மக்களை வழிபடுத்தவும் தோன்றினார். சைவத்தமிழர்கள் அம்மாவில் நம்பிக்கை வைத்தனர். பொருள் குவிந்தது. வந்தபொருளை நல்ல வழியில் பயன் படுத்தினார். மனித உள்ளங்கள் புனித உள்ளங்களாகின. சுற்றுலாவுக்கு வருபவர்கள் தெல்லியூருக்கு வந்தே செல்

கின்றனர். நாவலர் பெருமான் தோன்றிய நல்லை நகரிலே நல்லைக்கந்தன் ஆலயத்தின் மேற்கு வீதியில் புனிதமான மணிமண்டபம் பிரகாசிக்கின்றது. மக்களுக்குப் பயன்படுகின்றது. இவற்றை எல்லாம் பார்க்கும்போது சைவத்தமிழ் மக்கள் செய்த புண்ணியமே செல்வி தங்கம்மா அவர்கள் தோற்றம் எனப் பெரியோர் கூறுகின்றனர்.

அம்மா அவர்கள் தனக்குப் பின் துர்க்கா நிறுவனத்தை வழிநடத்த நல்லவர் ஒருவர் வேண்டுமென விரும்பினார். திருவருட்சக்தியின் அருளால் அவரது விருப்பம் நிறைவாகியது. அதிபர் பதவியைத் துறந்து தக்கார் ஒருவர் வந்து யாவரும் மகிழ்ச்சியடையக் கூடியதாகச் செயலாற்றுகின்றார். பெருமைக்குரிய செயல்கள் செய்துவிட்டார். இன்னும் பல செயல்கள் நடைபெறப் போகின்றன. சைவத் தமிழ் உலகம் அவருக்குக் கைகொடுக்கும். தெல்லிப்பழை மட்டுமல்ல, வலிவடக்கே சிறப்படையும்.

யாழ். மண்ணில் ஒவ்வொரு கிராமங்களிலும் நோயாளரைப் பேண வைத்தியர்கள் தோற்றம் பெறுகின்றனர். யான் நேரில் கண்டவர்களில் சுதுமலை அண்ணாமலைப் பரிகாரியார் ஒருவர். அருமையான மனிதன் ஏழை – பணக்காரன், பெரியவர், சிறியவர் என்ற வேறுபாடு கிடையாது. நோயாளியிடம் பெருந்தொகைப் பணம் பெறவேண்டும் என்ற ஆசை கிடையாது. மேசையில் வைத்த காசு எவ்வளவு என்றும் பாரார். போய் வாருங்கள் என்று அனுப்புவார். பசி தீர்ப்பது உணவு. நோய் தீர்ப்பது மருந்து. அதுவும் இயற்கையோடு சேர்ந்த மருந்து. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" இதே போல "மருந்து கொடுத்தோரும் உயிர் கொடுத்தோரே".

யான் நூல்கள் மூலம் வாசித்து அறிந்த தொண்டு செய்தவர்களுள் நல்லூரில் பிறந்த நாவலர் முதலிடம் பெறுகின்றார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இப்பெரியார் தோன்றாவிட்டால் தமிழ்மொழி எங்கே – சைவசமயம் எங்கே? அழிந்திருக்கும். இவர் செய்த சமயத்தொண்டு, கல்வித் தொண்டு அளப்பரியது. இலங்கையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் தமிழ் மொழிப் பாடசாலைகள் அமைத்துச் சைவசமயம் வளர்த்த பெருமை இவருக்கு உண்டு. சைவ ஒழுக்கம் வளர நூல்கள் எழுதினாார். சொற்பொழிவாற்றினார். "வசன நடை கைவந்த வல்லாளன்" என்ற பெயர் பெற்றவர்.

நாவலர் பெருமான் வழியைப் பின்பற்றி வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வித் தொண்டு செய்த பெரியார்கள் பலர். பாடசாலைகளை நிறுவிச் சைவத்தையும் தமிழையும் வளர்த்தனர். உதாரணத்திற்கு இந்துபோட் இராசரத்தினம் முதலிடம் வகிக்கின்றார். தெல்லிப்பழையில் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் செய்த தொண்டு யாவரும் மறக்கமுடியாது. தமிழ்ப்புலவர் பலர் சமூக நன்மை கருதி நூல்களை வெளியிட்டுள்ளனர்.

எமது தாய் நாடாகிய இந்தியாவில் மகாத்மா காந்தி தோன்றினார். பட்டம் பதவி பணம் எதனையும் எதிர்பார்க்காமல் நாட்டு மக்களுக்காத் தொண்டாற்றினார். சாதி மதபேதம் ஒழிக்கப் பாடுபட்டார். இந்தியா சுதந்திரம் பெற

வேண்டும் என்ற விடாமுயற்சியில் அவர் பட்ட இன்னல்கள் சொல்லவோ அளக்கவோ முடியாது. இந்திய நாட்டின் பொருள்வளம் பெருகவும், மக்கள் சிக்கன வாழ்வு வாழவும் வழிகாட்டினார். தென்னாபிரிக்க இந்திய மக்களுக்குச் சில காலம் தொண்டு செய்தவர். பின் இந்தியாவுக்குக் குடும்பத்துடன் வரும்போது நான்கு பேருக்கும் போதியளவு தங்கம் அந்த நாட்டு மக்கள் கொடுத்தனர். இந்தியா வந்த பின் தமக்குக் கிடைத்த தங்கம் முழுவதும் இந்தியா நாட்டிற்கு உரியது என்றார். இதனால் குடும்பத்தில் பிரச்சினை. தனக்குத் தந்த அறுபத்தியிரண்டு தங்கப் பவுணும் தனக்கு வரப்போகும் மரு மகளுக்கு நகை செய்து வோடவேண்டும் என்றார். தந்தையும் தாயும் முரண்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட மக்கள் சொன்னார்கள் – 'அம்மா எங்களுக்கு வரும் மனைவிமாருக்கு நகை வேண்டாம், அப்பாவின் விருப்பப்படி விடுங்கள் அம்மா.

காந்தியின் தூய வாழ்க்கையையும் அறநெறியையும் பாராட்டி தாகூர் இவருக்கு "மகாத்மா" என்ற பட்டம் சூட்டி உலகறியப் புகழ்ந்தார். மகாத்(து)மா என்றால் அதன் பொருள் – சுயநலம் கருதாமல் பொதுநலத்திற்காக அல்லது ஓர் உயர்ந்த இலட்சியத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்; உன்னத மனிதர்.

புத்தர் பெருமானிடம் செல்வோம் இல்வாழ்க்கை வாழ்ந்த புத்தர் பிறர் துன்பத்தைப் பார்த்தார். மனித உயிர் களின் துன்பத்தைப் போக்குவதற்காகத் துறவியானார். பல ஆண்டுகள் பாடு பட்டார், தவம் இருந்தார். உண்மை கண்டறிந்தார். உலக மக்களுக்காகத் தொண்டாற்றினார். போதனை செய்தார். இவரது போதனை சிங்கள மக்களின் மனதில் பதிந்திருந்தால் இலங்கை நாடு நல்லாட்சி புரியும் நாடாகத் திகழும்.

அப்பர் (நாவுக்கரசர்) சரியைத் தொண்டு செய்தார். திருப்பதிகம் பாடித் தந்தார். ஆலயங்களில் சிறுவர் தொடக்கம் முதியோர் வரை சரியைத் தொண்டு செய்ய விரும்பவேண்டும். புனிதத் தன்மை தான் கடவுள் தன்மை. எமது கிராமங்களில் ஓய்வான நேரங்களில் சரியைத் தொண்டு செய்து பயன்பெறவேண்டும். தொண்டு செய்த பெரியோர்களை நாம் வணங்க வேண்டும். எதிர்கால மக்களுக்கு அவர் களைப் பற்றித் தெரியப்படுத்த வேண்டும்.

## ஆசிரியர் குறிப்பு

அருள் ஒளி ஐப்பசி – கார்த்திகை இதழ் – 110இல் பிரசுரமான "நவகோள்களை அடக்கி ஆளும் சாதனை" என்ற கட்டுரையை எழுதியவரின் பெயர் தவறுதலாகப் பிரசுரிக்கப்படவில்லை. கட்டுரையாளர் சித்தாந்த ரத்தினம் திருமுறைநெறிச் செல்வர், வைத்தியகலாநிதி ஸ்ரீ கார்த்திகைக் குமரன் சரவணமுத்து அவர்கள் ஆவார்.

– ஆசிரியர்

# இலட்சிய வாழ்வு

காந்தி ஆசிரியர் பொ. கந்தையா அவர்கள்

பண்ணாகம் மெய்கண்டான் பாட சாலை வெள்ளிவிழா மலரில் 1950இல் வெளிவந்தது. (அப்போது வயது 32) எல்லோரும் வாழ்கிறார்கள். விலங்கு களும் பறவைகளும் வாழ்கின்றன. மரஞ் சொடிகளும் வாழ்கின்றன. விலங்குகள் இயற்கையை ஒட்டியே வாழ்ந்து வரு கின்றன. நம்மை அண்டிச் சீவிக்கும் விலங்குகள் கூட இயற்கையில் இருந்து அதிகம் விலகிவிடவில்லை. மரங்களும் அப்படியே. ஆனால் அரிதான மானிடப் பிறவியைத் தாங்கி வந்த மக்கள் இன்று இயற்கையைவிட்டு இன்னல் வாழ்க்கை யில் இறங்கித் தவிக்கின்றனர். இறங்கிய வழியையும் கண்டிலர். ஏறும் வித்தை யும் தெரிந்திலர். ஐயோ பரிதாபம். ஆனால் வாழ்வுக்கு வரைவிலக்கணம் சொல்லுவதில், எழுதுவதில் மகாவித்து வான்கள் ஆகவும் காட்சி அளிக்கின்றனர். இயற்கை வாழ்வு வாழும் மனிதனை கிராமத்தில் மட்டுமல்ல, தேசததிலும் கூடக் காணமுடியவில்லை. அப்படியானால் சித்திரத்திலே தான் கீறிப் பார்க்கவேண்டும்.

அன்று வாழ்ந்த இயேசு கிறிஸ்துவை சித்திரத்தில் பார்க்கிறோம். இலட்சிய வாழ்வை அங்கு காண்கிறோம். கற்பனை செய்கிறோம். ஆனால் அப்படி வாழமுடி யாது என்று முடிவுகட்டி விடுகிறோம். புத்தர் பெருந்துறவைப் படிக்கிறோம். அவரது ஞான ஒளியைப் பார்த்துக் கடவுளின் அற்புதத்தை வியக்கிறோம். அரசிளங் குமாரனான புத்தர் ஞானகுருவான சரித்திரத்தைப் படித்த பின்பும் நமது வாழ்வுப் பாதையில் நாலடி வைக்க நாணுகிறோம். கதாப்பிரசங்க மாகவே புத்தர் சரித்திரத்தைச் சொல்லி விடு வோம். அப்படியே நபிகள் நாயகத்தின் பெருமைகளைப் பேசுவதிலும் நாம் பின் நிற்பதில்லை.

இராமகிருஷ்ண பரமகம்சரை அவர் சீடர் விவேகானந்த சுவாமிகளைப் பலர் நேரில் கண்டனர். கூடிவாழ்ந்தனர். அவர்களும் மறைந்துவிட்டனர். மிக அண்மையில் வாழ்ந்து போன பகவான் ரமணரைப் பார்த்தோம். பகவான் அரவிந்தரைக் கண்டோம். நாம் செய்து கொண்ட மாற்றங்கள் என்ன, இலட்சிய புருஷர்களைப் புகழ்வதும், அவர்களுக்குக் கோயில் கட்டுவதும் தான் எமது இலட்சியங்களாய் விட்டன.

கடைசியாக காந்தியடிகளின் வாழ்க் கையை நோக்குவோம். அவர் யோகத்தில் ஆழ்ந்து கிடக்கவில்லை. மோனத்தில் மூழ்கிக் கிடக்கவில்லை. தரித்திர நாரா யணர்களுடன் கூடி வாழ்ந்தார். அவர்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டார். எங்களால் கரிசனங்கள் படும் இன்னல் களைக் கண்டு இரங்கினார். தானும் ஓர் கரிசனாகவே வாழ்ந்து அவர்களை இலட்சிய வாழ்வுக்கு இட்டுச் சென்றார். காந்திவழி செல்கிறோம் என்று கதர் உடுத்து மற்றவர் கண்ணுக்குக் காட்சி யளிக்கும் நாம் கரிசனங்களுக்குச் செய்தது என்ன. இன்னும் பாடசாலைகள் வழிவிட வில்லை. கோயிற் கதவுகள் திறக்கப்பட வில்லை.

கோட்டல்கள் அவர்கள் பசியைப் போக்கவில்லை. பெரிய பதவிகள் அவர்களைச் சேர்க்கவில்லை. வேற்றுமைகள் இருந்தபடி இருக்கின்றன. கரிசனங்களுக்கு இல்லாத உரிமைகளை நாம் அனுபவிக்க மறுக்கவேண்டும். காந்தியடிகளையாவது இயற்கையோடு இயைந்து வாழவிட்டோமா? எமது பிற்போக்குச் சக்தியும் சுயநலப்போக்கும் ஒரு கோட்சேயாக உருவெடுத்துக் காலத்துக்கு முன் காந்தியடிகளைக் கடவுளடி சேர்த்தன.

வாழ்வுக்கு முன் சில சொற்களைச் சேர்த்துப் போசுகிறோம். இலட்சிய வாழ்வு அமர வாழ்வு, சுதந்திர வாழ்வு, சுபீட்சவாழ்வு, சத்திய வாழ்வு, ஆன்பு வாழ்வு என்றெல்லாம் கூறிவிட்டு மனம் போன போக்கெல்லாம் போகிறோம். இலட்சிய வாழ்வு மனிதனின் கடமை என்பதை மறந்துவிடுகிறோம். நமது பிழைகளை ஒப்புக் கொள்வதற்குப் பதிலாக அவற்றை மறுக்க முற்படுகிறோம். பஞ்சமா பாதகங்களை பச்சையாகவே செய்ய கங்கணம் கட்டி நிற்கிறோம். கடைகெட்ட கைலஞ்சத்தையும் சீர்கெட்ட சீதனத்தையும் நாகரிகத்தின் சின்னங்கள் என்று கைக்கொள் கிறோம். பலருடைய உதவியும் பெற்றுக்கட்டிய பொது ஸ்தாபனங்களை நம்மில் பணம் படைத்தோர் சிலர். அபகரித்துக் கொண்டு தாம் ஆட்சி செலுத்தி அனுப விப்பதோடு நின்றுவிடாமல் தமது சந்த திக்கும் உரிமையாக்கி அழியாப் பழியை அநியாயமாகச் சம்பாதிக்கிறோம். இவ்வாறு எல்லோரும் நரக லோகத்துக்கே நடை கட்டுகிறார்கள். சுவர்க்க லோகத்தைச் சிந்திப்பதற்கோ சிலர் தானும் இல்லை. எல்லோரும் பாலைவனத்தில் பரிதவிக்கிறார்கள். பசுந்தரைகளைப் பார்த்து மகிழ மனிதர் எவருமில்லை.

வாழ்க்கையின் இலட்சியங்களை ஒவ்வொன்றாக எழுத இச்சிறு கட்டுரை இடந்தராது. ஆகவே இலட்சிய வாழ்வை வாழ்ந்து எம் கண்முன் நின்ற மகாத்மாவை மனதில் இருத்துவோம். இலட்சிய புருஷர்களின் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் பிறர் எழுதி வைத்தனர். அவ்வாறு வாழ முடியாதென்று கூறி அவர்கள் உபதேசங்களை வாய்ப்பாடம் சொல்லும் அளவில் நின்றுவிட்டோம். இது மட்டுமல்ல, மதத்தின் பேரால் போர்களையும் தொடுத்தோம். மதம் மனிதனை அணுக்குண்டு எல்லைக்கும் கொண்டு வந்துவிட்டது. கடவுள் இந்நிலையில் காந்தியடிகளை அனுப்பியதோடு அவர் சரித்திரத்தை அவரே எழுதவும் செய்து ஒரே மதம் ஒரே கடவுள் ஒரே உலகம், ஒரே மக்கள் என்ற சமரச ஞானத்தையும் மக்கள் குலத்துக்கு உணர்த்தினார்.


காந்தியடிகளின் சுயசரித்திரமான சத்திய சோதனை தான் இலட்சிய வாழ்வை நமக்கு அளிக்கக்கூடிய ஒரே ஔடதம். இதனால் நமது உடல் உள நோய்கள் தீரும். சத்திய வேட்கை அன்பாசை ஆகிய பசிகள் ஏற்படும். இவற்றுக்குக் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் உணவாகக் கொள்ள வேண்டும். அப்போது இலட்சிய வாழ்வுக்கான விதிகள் நமது மனச்சாட்சியின் புலனாகும். அதன் வழி செல்வோம். அது தனி வழியன்று புதுவழியும் அன்று. அன்று அரிச்சந்திரன் சென் றவழி இன்று காந்தியடிகள் சென்ற வழி வள்ளுவர் வகுத்த வழியும் இதுவே. இன்னும் எத்தனையோ பெரியோர்கள் சென்று சென்று சிறப்புற்றிருக்கும் வழியுமாகும். ஆதலால் நாம் பயமின்றி அந்த இலட்சிய வழியிலே செல்லுவோம்.

சத்திய சோதனை ஆகிய சாத்திர கூடத்தில் நமது இளைஞர்கள் வாழ்க்கைப் பரிசோதனை தொடங்க வேண்டும். பெற்றோர்களும் பெரியோர்களும் இலட்சிய வாழ்வைச் சிறுவர்களுக்கு வாழ்ந்து காட்டவேண்டும். இதற்கு ஏற்றபடி கல்வி தொழில் பழக்கம் எல்லாம் கொடுக்கப்படல் வேண்டும். மாணவர் களைப் பரீட்சையில் சித்தியெய்தப் பண்ணுவது பாடசாலையின் இலட்சிய மாக இருக்கக்கூடாது. எத்தனை இலட்சிய புருஷர்களை எத்தனை இலட்சியப் பெண்களை உற்பத்தி செய்கிருக்கிறது என்பதில் தான் ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் உயர்ச்சியும் தங்கியுள்ளன. காந்தியடிகள் தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்து இங்கிலாந்து சென்று தன் வாழ்க்கையைப் பேணியது போல நமது இளைஞர்களும் பெற்றோருக்கோ ஆசிரியருக்கோ சத்தியம் செய்து கொடுத்துப் பிற்கால வாழ்வில் அதனைப் பேணவேண்டும். தெய்வத் தன்மை மிக்க இளஞ் சிறுவர்களிடம் இப்படிச் சத்தியம் கேட்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சிய வாழ்வு வாழும் ஆசிரியர்கள் தான் பாடசாலை களில் அமர்த்தப்படவேண்டும். மற்றவர் கள் தாமாகவே இந்தப் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வது கௌரவம் என்பதோடு சமூகத்துக்கும் தேசத்துக்கும் செய்யும் பெரிய தர்மமும் ஆகும். இலட்சிய வாழ் வுக்கு எடுத்துக் காட்டாக பாடசாலைகளும் ஆசிரியர்களும் அமையும்போதுதான் மக்களிடையே நாளடைவில் இலட்சிய வாழ்வு முளை கொள்ளும்.

*இலட்சிய வாழ்வே இயற்கை வாழ்வு*

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.*

## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்



ஒட்டுச்சித்திரம்
1ம் இடம்
செல்வி. வி. அனஸ்ரியா



பேச்சுப்போட்டி
செல்வி. யோ. அனுஷா


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## இந்தியா சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாசா உயர் பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழா









# திருவெம்பாவை

திருவாசகத்திலே ஒரு சிறந்த பகுதி திருவெம்பாவை. இது மார்கழியில் ஓதவேண்டிய சிறப்புடையது.

மாணிக்கவாசக சுவாமிகள் திருத் தில்லையிலே ஒருபுறம் பர்ணசாலை அமைத்து, அதிலிருந்து தவம் புரிந்து கொண்டிருந்தார். அம்பலவாணர் ஒரு தவமுனிவராகச் சென்று மாணிக்கவாச கரைக் கண்டு, "அன்பரே! தாங்கள் பாடியருளிய திருவாசகத்தைச் சொல்லும்; நான் எழுதிக் கொள்கிறேன்" என்றார். அவருடைய விருப்பப்படியே மாணிக்க வாசக சுவாமிகள் திருவாசகத்தைக் கூறினார்.

### திருவெம்பாவை

எல்லாம் எழுதி முடித்தபின், ஆனந்தக் கூத்தர், "அன்பரே! பாவை பாடிய வாக்கி னால் கோவை பாடும்" என்று அருளிச் செய்தார்; இங்கே பாவை என்பது திரு வெம்பாவைக் குறிக்கும். திருவாசகத் துக்குள் 'பாவை பாடிடுவாய்' என்று இதனைச் சிறப்பித்துக் கூறினார். எனவே திருவெம்பாவை ஒப்புயர்வற்ற உன்னத வாக்கு.

### மார்கழிச் சிறப்பு

இதற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. மார்கழி மாதத்தில் பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு, இத்திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓதவேண்டும். இது இன்றும் நிகழ்கின்ற ஆன்றோர் மரபு.

மார்கழி மாதம் சிறந்த மாதம்; கல்வியிற் சிறந்தவர் சூரியமூர்த்தி; அவர் தேவகுருவாகிய வியாழ பகவானுடைய வீடாகிய தனுர் ராசியில் சஞ்சரிக்கின்ற மாதம் மார்கழி. அதனால் அம்மாதம் உயர்ந்தது. கண்ணபிரான் கீதையில் 'அர்ஜுனா! நான் மாதங்களில் மார்கழி மாதமாக இருக்கிறேன்' என்கிறார். இம் மார்கழி தீட்சைக்கு உரிய மாதம்.

இனி பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தில் திருவாதிரை திருவிழாவும், பூலோக வைகுந்தமாகிய ஸ்ரீரங்கத்தில் ஏகாதசி நல்விழாவும் நடைபெறுவது மார்கழியில்தான்.

### வைகறை வழிபாடு

மார்கழி மாதம் வைகறையில் செய்யும் வழிபாட்டைப் பற்றிச் சிவாகமத்தில் ஒரு வசனம் வருகின்றது.

**"சாபகத பாநு திவஸாந்த்ய நிசிகாலே**
**ஆதிசிவ தேவ்யாஸஹ ஏகதின பூஜா**
**ஏகதின பூஜாபலம் கோடிதினே நாஸ்தி**
**இந்த்ரபதி இந்த்ரசிவ கோடிதின வாஸம்"**

**இதன் பொருள் :**

சாபம் – வில், கத – அடைவது, தநுர் ராசியில் சூரியன் சஞ்சரிக்கின்ற மாத மாகிய மார்கழியில், விடியற் காலத்தில் உமை யம்மையுடன் கூடிய சிவபெருமானை ஒருநாள் வழிபடுவார்களாயின், அந்த ஒரு நாள் பூஜைக்கு மற்றைய நாட்களில் கோடி நாள்களின் பூஜை நிகராகாது. மேலும்

மார்கழி மாதம் விடியற்காலையில் ஒருநாள் சிவமூர்த்தியை வழிபட்டவர்கள் இந்திரனைப் போன்ற சிறப்புடன் சிவபோகத்தில் இந்திரனுடைய நாட்களில் கோடி நாட்கள் இன்புற்று இனிது வாழ்வார்கள்.

*(நமது ஆண்டுகளில் முந்நூற்றுபது கொண்டது ஒரு தேவ ஆண்டு)*

**பாராயணப் பலன்**

உத்தமமான பிறப்பெடுத்த நாம் இத்தகைய புனிதமான மார்கழி மாதம் விடியற்காலையில் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காது, துயில் எழுந்து, நீராடி, நீறாடி, திருவெம்பாவை திருப்பள்ளி எழுச்சி என்ற இரு நூல்களையும் பக்திப் பரவசத்துடன் பாராயணம் புரிதல் வேண்டும். அங்ஙனம் புரிவோர்க்கு ஆணவ இருள் நீங்கி சிவஞான ஒளி உண்டாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் அருளிச் செய்த திருவெம்பாவை, நவசக்திகளும் தமக்குள் துயில் உணர்த்தும் தன்மையை உணர்த்துவது.

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை**
**யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய**
**– வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து**
**போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு**
**– இங்ஙன்**
**ஏனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே**
**ஈதே எந்தோழி பரிசு? ஏல்ஓர் எம்பாவாய்".**

**அருள் ஜோதி**

இறைவன் ஜோதி மயமானவன். அருட்பெருஞ் ஜோதி. இன்ன காலத்தில் தோன்றிய ஜோதி என்ற காலவரம்புக்கு அது உட்படாதது. அதற்கு முடிவுமில்லை. முதலும் முடிவும் இல்லாத அருமை பெருமையுடையது.

**"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி"**

என்ன அருமையான அமுதவாக்கு! தித்திக்கின்ற தேனமுத வாக்கு.

"வாள் தடம் கண் மாதே!" ஒளிபெற்ற விசாலமான கண்களையுடைய பெண்ணே!

ஒளியும் அகலமும் படைத்த கண்ணுடையவளே என்று அழைத்ததனாலும், இப்போது துயில்கின்றபோது இருளும் குவிதலும் பூண்டிருக்கின்ற கண் என்பதைக் குறிப்பிடுகின்றது. உய்த்துணர வைத்தல் என்ற உத்தி,

"வளருதியோ" இன்னும் நீ கண் வளரலாமோ?

"வன் செவியோ நின் செவிதான்" உனது மென்மையான காது என்ன வன்மை பெற்றதா?

**அன்பின் காட்சி**

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய் வீதிவாய்க் கேட்டலுமே"

நாங்கள் வீதியில் தேவதேவனாகிய சிவபெருமானை வாழ்த்திய ஒலியைக் கேட்ட மாத்திரத்தில்,

**"விம்மி விம்மி மெய்மறந்து**
**போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!....**

அன்புள்ள ஒருத்தி ஆனந்த மேலீட்டாலும் அன்பின் உணர்ச்சியாலும் விம்மி, விம்மி, தன் உடம்பை மறந்து, மலர் நிறைந்த படுக்கையின் மீது புரண்டு, தன் வசம் இழந்து ஒன்றையும் உணராது கிடக்கின்றாள். (இதோ பார் இந்த அன்பின் காட்சியை)

"ஈதே என் தோழி" – எமது தோழியே! இதுவல்லவா சிவபக்தி? என்ன அதிசயம்! நீ பார்!

"பரிசு ஏல் ஓர்" இத்தன்மையை நீ ஏற்று ஆராய்ந்து பார்கு!


'எம்பாவாய்' – எமது பாவை போன்றவளே!

இத்தகைய அற்புதமான இனிய பாடல்களாகிய திருவெம்பாவையை அன்பர்கள் மார்கழி மாதம் வைகறையில் தவறாது ஓதி, அகம் புறம் என்ற இரு இடங்களிலும் நின்று சிவனருளால் இகம் பரம் என்ற இருமை நலன்களையும் பெறுவார்களாக.

*நன்றி:*
**சிந்தனைச்செல்வம்**

# சிறுவர்தினம் - வடமாகாணம்





மேற்பிரிவு
கைவினைப் போட்டி
2ம் இடம்
செல்வி ஜான்சிகா
ஆனந்தராசா

மேற்பிரிவு – வில்லிசை – 1ம் இடம்,
மத்திய பிரிவு – வில்லிசை – 3ம் இடம்

# இரவீந்திரநாத் தாகூரின் நோபல்பரிசுபெற்ற கீதாஞ்சலி

*சென்ற இதழ் தொடர்ச்சி..*

மொழிபெயர்ப்பு பூ. சோதிநாதன்
*ஓய்வுநிலை விரிவுரையாளர்*

### 3. கீதமாய வலையினிற் சிக்குண்டேனே

ஞானமே வடிவ தாகும்
ஞானவான் நீயே பாடும்
தேனமு தான பாட்டைத்
தேடிநான் சுவட்டைக் காணேன்
ஆனபோ தின்னும் இன்னும்
ஐயநின் பாடல் தன்னை
மோனமாய்க் கேட்டுக் கொண்டே
முறுவலில் மகிழ்கின் றேனே.

நீஇசைக் கின்ற கீதம்
நிலத்தினைச் சோதி ஆக்கும்
நீஇசைக் கின்ற கீதம்
நீடுயிர்க் காற்றை வானம்
போயிடும் வரைக்கும் தேக்கும்
பொய்யிலா உந்தன் கீதம்
ஆயிடும் தேவ கானம்
அரிக்குங்கல் நெஞ்சைக் கூட.

ஏழையேன் இதயம் உந்தன்
எழில்மிகு கீதத் தில்தான்
ஆளையே மறந்து நித்தம்
அமைவுறக் கலக்க லாமென்
றூழையே நீக்கி ஆசை
ஊக்கிடும் என்ற போதும்
கோழையாய்க் குரலும் இன்றிக்
குமைதலைத் தானே செய்யும்

பேசிநான் பார்த்த போதும்
பெருகிய தில்லைப் பாட்டாய்
காசினி முற்றும் ஐயோ
களைத்திடத் தோற்றேன் தோற்றேன்
ஆசிலா ஞான மூர்த்தீ
அடியவன் குருவே உந்தன்
மாசிலாக் கீத மாய
வலையினிற் சிக்குண் டேனே.

### 4. புந்தியில் மாசு நீங்கப் பொய்யினை விலக்குவேனே

எனதுயிர்க் குயிரே! உந்தன்
எழில்மிகும் உயிர்ப்பே என்றும்
எனதுடல் அங்கம் எல்லாம்
இழைவதை அறிவ தாலே
எனதுடல் யாவும் தூய
இயல்புடன் வைத்துக் கொள்ள
தினமெலாம் தப்பா தென்றும்
திகழ்ந்திட முயல்வன் நானே.

எந்தனின் மனத்தில் நன்றாய்
எழிலுடைத் தருக்க வாதம்
வந்திடும் ஒளியைத் தூண்டும்
மாண்புடை உண்மை நீயே
தந்திடப் பெற்ற தன்மை
தமியனேன் உணர்வ தாலே
புந்தியில் மாசு நீங்கப்
பொய்யினை விலக்கு வேனே!

எனதுளம் உள்ளே கோயில்
இருக்கையாய் கொண்டாய் என்றே
உனதியல் பதனை நானும்
உணருவன் ஆத லாலே
எனதுளக் கேடு யாவும்
இறந்திட முயல்வ தோடு
மனதினில் அன்பு தானாய்
மலர்ந்திடச் செய்வன் நானே.

செயல்தனைச் செய்ய நல்ல
செம்மையாம் உறுதி தந்து
மயலறு பலமாய் நிற்கும்
வலியவன் நீயே என்ற
இயல்பினை உணர்வ தாலே
இகத்தினில் எந்தன் எல்லாச்
செயலிலும் உன்னை நன்றாய்த்
தெளியவே துலங்க வைப்பேன்.

# மழையே மழையே!

( சென்னை வெள்ளம் குறித்து எழுந்த கவிதை )

– கவிஞர் இரா. இரவி

வறட்சியின் போது வேண்டினோம் பெய்தாய்!
வெள்ளத்தின் போதும் பெய்வது முறையோ?
தண்ணீர் இன்றி வாடியது துன்பம் என்றால்
தண்ணீரில் மூழ்கி வாடியது பெருந்துன்பம்

பெய்யும் மழை உயிர்த்துளி என்றோம்
பெய்த மழைக்கு உயிர்கள் இரையானது
ஆற்றில் தண்ணீர் ஓட மழை வேண்டினோம்
ஆனால் சாலையில் படகில் செல்லும்படியானது

அளவிற்கு மிஞ்சினால் அமுதம் மட்டுமல்ல
அடைமழையும் நஞ்சுதான் உணர்ந்தோம்
மொட்டை மாடியில் மூன்று நாள் தவித்தனர்
மறுபடியும் முதலில் இருந்து பெய்வது சரியா?

கழுதைக்கு கல்யாணம் செய்வித்தது தவறு தான்
கண்மூடித்தனமாக செய்ததற்கு வருந்துகின்றோம்
பெய்யென பெய்த மழையே இனி நாங்கள்
போதும் என்கிறோம் நின்றுவிடு! வாழ விடு!

மூன்று மாதத்து மழையை ஒரு நாளில் பொழிந்தாய்
மூழ்கித் தத்தளிக்கும்படி ஆனது வாழ்க்கை!
அழைத்த போதும் வந்தாய் சரி இப்போது
அழையா விருந்தாளியாய் வருவது ஏனோ?

குடை மழைக்கு காட்டும் கறுப்புக்கொடி என்றார்
குடை பிடிக்கிறோம் மழையே போய்விடு!
இரமணன் சொன்னபோது வரவில்லை சில நாள்
இரமணன் சொல்லாத போதும் வருவது ஏனோ?

சாரல் மழையில் நனைந்து மகிழ்ந்ததுண்டு
சாடும் மழையாக நீ ஆனது ஏனோ?

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விடுமுறை என்றதும் மாணவர்கள் மகிழலாம்
விடுமுறையில் தொழிலாளிக்கு கூலி கிடைப்பதில்லை.

வெளியேற முடியாமல் தவித்தனர் பலர்
வீடு மூழ்கி வேதனையில் வீழ்ந்தனர் சிலர்
சிறுதுளி பெருவெள்ளம் என்பார்கள் ஆனால்
பெருதுளி மாபெரும் வெள்ளமாகி வாட்டியது

வெயிலே வா! வா! மழையே போ! போ!
வேதனையில் பாடும்படி ஆனது இன்றோ!
ஆங்கிலப்பள்ளியில் பயிலும் குழந்தைகள்
அடிக்கடி பாடினர் மழையே போ என்று

இப்போது தான் அந்தப்பாட்டு பொருளுடையதானது
இப்போதைக்கு மழையே வராதே போ! போ!
ஏரி குளம் கணவாய் கால்வாய்களில் தேக்கலாம்
எல்லாவற்றையும் ஆக்கிரமித்து வீடு கட்டி விட்டோம்.

பெய்யென பெய்த மழையே இனிமேல்
பெய்யென வேண்டும்போது மட்டும் வா!

---

உ

துர்க்காதேவி துணை

## "அருள் ஒளி" ஆன்மீக மலரின் சந்தா உறுப்பினர்களாக பதிவு செய்தல்

அன்புடையீர்,

வணக்கம்.

எங்கள் தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் ஆன்மீக மலராகிய "அருள் ஒளி" உலகம் முழுவதும் வாழும் சைவத் தமிழர்களின் பாராட்டைப் பெற்றுத் தொடர்ந்து வெளிவருகிறது. எவ்வித இலாப நோக்கமின்றி ஆன்மீக சேவையாக இவ்வெளியீட்டுப்பணி நடைபெற்று வருகின்றது. புதிய சந்தா உறுப்பினர்களாக இருந்து இப்பணி தொடர உதவுமாறு நன்றியுடன் வேண்டுகின்றோம்.

உள்ளூர் சந்தா : 1000/- வெளிநாடு : 2500/-

கலாநிதி ஆறு. திருமுருகன்
*தலைவர்*

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
*தெல்லிப்பழை.*

# பெரியபுராணம்

**வே. தனபாலசிங்கம் அவர்கள்**

**சென்ற இதழ் தொடர்ச்சி....**

மறைச் சிலம்பார்க்கக் கேட்டார். பின் சுற்றுமுற்றும் பார்த்தார். எல்லை காணமுடியாத பெருங்கூத்தைக் கண்டார் சுந்தரர், மகிழ்ந்தார்.

இறைவன் இயற்பகை நாயனாரின் சிவபக்தியை – சிவனடியார் பக்தியை உலகிற்குக் காட்ட எண்ணினார். வேதியர் வேடங்கொண்டு இயற்பகையின் இல்லத்துள் புகுந்தார். சிவனடியாரை வரவேற்க என்ன மாதவஞ் செய்தேன் என எண்ணிய இயற்பகையார் அன்போடு வேதியரை வரவேற்றார். வேதியர் "ஒரு பொருள் வேண்டி வந்தேன், தரமுடியுமானால் சொல்லலாம்" என்றார். அப்பொழுது இயற்பகையார் "என்னிடம் உள்ள பொருள் எல்லாம் சிவனடியாருக்கு உடைமையே யாகும். ஆனபடியால் தேவரீர் கேட்கலாம்" என்றார். வேதியர் "உன் காதன் மனைவியை வேண்டி வந்தேன்" என்றார். இது கேட்ட இயற்பகையார் மகிழ்ச்சியுடன் மனைவியிடம் சென்று "மடந்தையே உன்னை இந்த வேதியர்க்குக் கொடுத்தேன்" என்றார். அந்த நேரத்தில் திருவாட்டி இயற்பகையார் சொன்னவற்றையும், நின்ற நிலையையும் சேக்கிழார் காட்டும் முறை கற்றாரைக் கழிபேருவகை அடையச் செய்கிறது. இப்படியும் ஒருவன் செய்தானோ என்று ஏங்கச் செய்கிறது.

**"இன்று நீரென்னை யருள் செய்த திதுவே**
**என்னுயிர்க் கொருநாதர் நீருரைத்த**
**தொன்றை நான் செய்யுமத்தனை யல்லால்**
**உரிமை வேறுளதோவெனக் கென்று**
**தன் தனிப்பெருங்கணவரை வணங்கத்**
**தாழ்ந்து தொண்டனார் தாமெதிர்வணங்கச்**
**சென்று மாதவன் சேவடிபணிந்து**
**திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்"**

என்னுயிர்க்கு ஒரு நாதர். சாதாரணமாகக் கணவனின் உடம்புக்கு நாயகனாகவே கருதுவார்கள். இங்கே உயிருக்கு நாதர் என்று கருதப்படுகிறார். உயிருக்குத் தலைவனாக இயற்பகையார் மனைவியால் மதிக்கப்படுகிறார். வேறு ஒருவிதமாகச் சிந்தித்தால் – என் உயிருக்கு இந்தப் பிறவியிலே ஒரு நாதர்தான் இருக்க முடியும். அவர் இயற்பகையாரே என்று மனைவி எண்ணுகின்றார். கற்புடைய மகளிர்க்கு ஒருவனே கணவன். அவனே தெய்வம். இந்த உண்மையை நன்கு உணர்ந்த திருவாட்டி இயற்பகையார் பின்பு சொல்லுகிறாள். நீங்கள் தான் எனக்கு நாதர். நீங்கள் சொன்னதைச் செய்வதுதான் எனது உரிமை, கடமையுங் கூட அதுதான். இந்த இடத்திலே தான் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்ற அருமை மொழி சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது. தங்கப் பாத்திரத்தில் தகுந்த இடத்திலே புலவன் உண்மையைப் புலப்படச் செய்தமை எவராலும் பாராட்டப் படவேண்டியதே.

தன் தனிப்பெருங் கணவரை வணங்கினார். ஒப்புயர்வற்ற நாயகராக இயற்பகையாரை மனைவியார் மதித்து வணங்கினார் என்பதைக் காண்கின்றோம். மனைவி வணங்கும் போது நாயகனாரும் வணங்குகிறார். இந்த இடம் சிந்திக்க வேண்டிய இடம். இல்லையென்னாத இயற்பகையாரின் சொல்லைக் காப்பாற்றியது அவரது அருமை மனைவியே. இந்த உடம்போ பொருள்களோ யாருக்குச்

சொந்தம் என்ற உண்மை இயற்பகை யாருக்கு விளங்கும். வேதியன் யார் என்பதும் அவருக்குப் புரியும். எனவே தமது மனைவியை எதிர் வணக்கம் செய்து பிரிய விடை கொடுக்கிறார். பின்பு என்ன நடக் கிறது? திருவாட்டி இயற்பகையார் மாதவன் சேவடி பணிந்து திகைத்து நிற்கிறார். இங்கே திகைத்து என்பது பெண்மையின் இயல்பைக் காட்டுகிறது. கற்புள்ள நங்கையரின் பயிர்ப்புக் குணத்தைக் காட்டுகிறது. இந்த வேளையிலே திருவாட்டி இயற்பகையார் "திருவினும் பெரியாள்" என்று பெரிய இடத்துப் பெண்ணாகின்றாள். கூட்டிக் கொண்டு போகின்றவர் சாதாரண மனிதனா? வானாடர் காணாதமன். கருணைக் கடல் அல்லவா கூட்டிச் செல்கின்றான். எனவே இலக்குமியிலும் பார்க்கச் சிறந்தவளாக நாயனாரின் மனைவி மதிக்கப்படுகிறாள்.

இலக்குமியை வேண்டி அதாவது செல்வம் வேண்டும் என்று வழிபடு கிறவர்களிடம் அவள் சென்று விடுவாள். இங்கே வேதியனாகிய சிவன் வேண்டுதல் செய்ய இந்த இலக்குமி (திருவாட்டி இயற்பகை) சிவனைச் சென்றடை கின்றாள். சென்றடையாத திருவுடை யானைச் சென்றடைகின்றாள். ஆகவே இலக்குமியிலும் பார்க்க இவள் பெரியவ ளாகச் சேக்கிழார் காட்டிய நிலை எவராலும் பாராட்டக்கூடிய நிலை.

அன்றைய தமிழரின் நாகரிகத்தை அவர்தம் கற்பை, பக்தியை நாம் சிறிது சிந்தித்தால் சேக்கிழார் பெருமையும் – பெரியபுராணம் பெரியபுராணந்தான் என்ற உண்மையும் வெளிப்படையாகப் புலனாகும். அதில் நுழைந்தவர்களே உண்மையை உணர்வார்கள்.

நாவுக்கரசரின் கயிலைக் காட்சியில் ஒரு செய்யுளை நோக்குவோம்.

**"கண்ட ஆனந்தக் கடலினைக் கண்களால் முகந்து**
**கொண்டு கைகுவித் தெதிர்விழுந்தெழுந்து மெய்குலைய**
**அண்டர்முன்பு நின்றாடினார்: பாடினார்: அழுதார்**
**தொண்டனார்க்கங்கு நிகழ்ந்தன யார்சொல வல்லார்"**

ஆனந்தக் கடலைக் கண்ட திரு நாவுக்கரச நாயனாரின் அன்புநிலை இங்கே சொல்லப்படுகிறது. அவர் கண்ட நிலையை அவரே அறிவார். எங்களால் எப்படிச் சொல்லமுடியும்.

ஞானசம்பந்தப் பெருமானைப் பற்றிச் சொல்புகுந்த சேக்கிழார் – தனக்கிருந்த திறமை முழுவதையும் மிக அழகான தமிழில் எடுத்துக் காட்டுகிறார். எல்லாச் செய்யுள்களும் தமிழ் மணமும் சைவ மணமும் வீசுவன. ஒரு செய்யுளை நோக்குவோம்.

**"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை**
**– விளங்கப்**
**பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத**
**சீதவளவயற் புகலித் திருஞான சம்பந்தர்**
**பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்".**

எல்லா வளங்களும் நிறைந்த சீர் காழியிலே பொய்கைக் கரையிலே ஞானக் குழந்தையின் புனிதவாய் மலர்ந்தழுதது ஏன் என்று சேக்கிழார் மிக அருமையாக எடுத்துக் காட்டுகிறார்.

இந்த உலகிலே வேதநெறி தழைத்து ஓங்க வேண்டும். மேன்மைகொள் சைவநீதி விளங்கவேண்டும். இந்த நல்ல நோக்கங் கொண்ட ஞானசம்பந்தர் அவதரித்தார். அவருடைய காலம் சைவம் குன்றிய காலம். மக்கள் வேதநெறியை மறந்து செயல்பட்ட காலம். "அவன் செயலால் அன்றி அணுவும்

அசையாது" என்பதை மக்கள் மறந்திருந்த காலம். இப்படியான காலத்திலே ஞான சம்பந்தர் தோன்றினார். அவர் செய்த அற்புதச் செயல்களை எல்லாம் நாம் சேக்கிழார் மூலமாகக் கேட்கும்போது தமிழ் அன்னையும் சைவமும் பெறுகின்ற இடம் மிக மேலான இடமாகும்.

சமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் விட்டார்கள். யாவரும் அதிசயிக்கும்படி கல் மிதந்தது. அப்பர் கரை சேர்ந்தார் என்பதைக் காட்டுகிறார் சேக்கிழார்.

"பெருகிய அன்பினர் பிடித்த பெற்றியால்
அருமலரோன் முதல் அமரர் வாழ்த்துதற்
கரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிடக்
கரும் நெடுங்கடலினுள் கல் மிதந்ததே"

இறைவனிடத்து அப்பருக்கு இருந்த அன்பு – அவர் இறைவனைப் பிடித்த தன்மை கல்லைத் தெப்பமாக்கி ஒரு பெரிய அதிசயமூட்டும் செயலைச் செய்து விட்டது. சமணர்களை வியப்படையச் செய்தது.

வீதிவிடங்கன் ஏறிவந்த தேர்ச்சில்லில் பசுக்கன்று அகப்பட்டு இறந்தது. இதனால் வருந்திய தாய்ப்பசு தன் துன்பத்தை மனுநீதி மன்னன் அறியும்படி அரண்மனை வாயில் மணியை அடித்தது. அவ்வோசை கேட்ட மன்னன் விரைந்து வந்து பசுவின் துன்பத்திற்குக் காரணம் வினவுகின்றான். மதிநுட்பம் வாய்ந்த அமைச்சன் சொன்ன பதிலை ஞானசூரியனாகிய சேக்கிழார் செம்மையாகக் காட்டுகிறார்.

"வளவ நின்புதல்வன் ஆங்கோர்
மணிநெடுந்தேர் மேலேறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாம்
தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால்
இடைப் புகுந்திறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித்தன்மை என்றான்"

இப்பாடலில் ஆழமுள்ள பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன.

இந்தச் செயலுக்குக் காரணம் உன் மகனே என்று முதலில் சொல்லுகிறார். தேரில் ஏறிச் சென்றபடியால் கீழே கன்று ஓடிவந்தது தெரியாது என்பதைப் புலப் படுத்துகிறார். மணி நெடுந்தேர் என்று கூறுகிறார். மணியோசை கேட்டுக் கன்று ஒதுங்கி இருக்கலாம் என்பதைக் காட்டவே மணி நெடுந்தேர் என்றார். கூடச் சென்றவர்கள் பலர் என்றும், போன பாதையோ அரசுலாந்தெரு என்றும் கூறுகிறார். ஆனால் பயம் அறியாத இளங்கன்று தானாகவே தேர்க்காலுக்குள் அகப்பட்டு இறந்ததாகவும் காட்டுகிறார். அரசன் கேட்ட வினாவிற்கு அமைச்சன் சொன்ன விடை, சொல்லிய முறை மிகப் பாராட்டக்கூடியதாகும்.

வீதி விடங்கனில் பிழை முழுவதையும் சுமத்தாமல் இவை எல்லாவற்றுக்கும் விதியே காரணம் என்பதை மறைமுகமாக மந்திரி உணர்த்துகின்றார். மந்திரியின் வாயில் வைத்து அருட்கவியாகிய சேக்கிழார் பாடிய பாடல் என்று சுவைக்கக் கூடியது.

வேதியர்கள் எவ்வாறு வேள்வி செய்வர் என்பதைச் சேக்கிழார் பின்வரும் பாடல் மூலம் காட்டுகிறார்.

"பரந்தவிளை வயல் செய்ய
பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில் வளர் தேமாவின்
கனி கிழிந்த மதுநறு நெய்

நிரந்த நீள் இலைக்கடையால்
ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும்
தகை என மயணந்துளதால்”

இயற்கையான ஒரு மருதநிலக் காட்சியை தெய்வீக உள்ளத்தோடு அருட்கவி காட்டுகிறார். இங்கே வயல் மரங்கள் கூட வேள்வி செய்கின்ற ஒரு நிலையைக் காட்டுகிறார்.

உவமைச் சிறப்புக்கு ஒரு செய்யுளை நோக்குவோம்.

“பஞ்சின் மெல்லடிப்பாவையர் உள்ளமும்
வஞ்ச மாக்கள் தம் வல்வினையும் பரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்”

உண்மைகளை மறைத்து வைத்திருக்கும் பெண்களின் உள்ளம் போலவும், அழுக்காறு உடையோரின் கொடிய வினை போலவும், திருவைந்தெழுத்தை அறியாதோரின் நெஞ்சு போலவும் ஆகாயம் இருண்டிருந்தது எனக் காட்டுகிறார்.

மங்கையர்க்கரசியாரின் பெருமையைச் சேக்கிழார் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

“மங்கயர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னிநாடாள்
தென்னார் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற இடர்நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே”

பாண்டிமாதேவி ஒரு தனியரசியாகவும், எங்கள் தெய்வமாகவும், வளவர் திருக்கொழுந்தாகவும், திருமடந்தையாகவும், தெய்வப் பாவையாகவும் சிறப்புப் பெறுகிறார். பாண்டியன் நெடுமாறனைச் சமண சமயத்திலிருந்து சைவனாக்கிய பெருமை மங்கையர்க்கரசியாரையே சாரும். எனவே தான் அருண்மொழியாரும் “தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை” என்று அவரைப் பாராட்டியுள்ளார். பாண்டிய நாட்டிலே சைவம் தழைத் தோங்கியது என்றால் அதற்குக் காரணமாக விளங்கியவர் மங்கையர்க்கரசியாரே. சைவத்திற்கு அம்மையார் செய்த தொண்டு அளப்பரியது.

கடைசியாகப் பொருட்சுவைமிக்க செய்யுள் ஒன்றை நோக்குவோம்.

“பேர் பரவை பெண்மையினில்
பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்ப்பரவை அணிதிகழும்
மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள்
திருவுருவின் மென்சாயல்
ஓர்பரவை இடைப்பட்ட
என் ஆசை எழுபரவை”

இவள் பேர் பரவை. இவளது பெண்மை அழகு முதலிய காரணத்தால் தேவர்கட்கும் தாயாவாள். இவளுடைய விரும்பத்தக்க அல்குல் பாம்புகளுக்குத் தலைவனாகிய ஆதிசேடனின் படம் போன்றது. இவளது அழகிய பற்கள் முல்லை அரும்புகள் போன்றவை. இவளது அழகு திருமகளும் புகழுந்தன்மையது. இவளது திருவுருவின் மெல்லிய சாயலில் இடைப்பட்ட என் ஆசை ஏழுகடல் போன்றது.

1. பரவை – பெயர்
2. பெரும்பரவை–பெரு+உம்+அவ்வை
3. ஆர்பரவை – ஆர்பு + அரவு + ஐ
4. அரும்பரவை – அரும்பா் + அவை
5. சீர்பரவை – இலக்குமி போற்றும் பரவை

6. பரவை – பரவு + ஐ
7. பரவை – கடல்

பரவை என்ற சொல் ஏழு பொருளில் அழகுறக் காட்டியுள்ளார்.


சேக்கிழார் நமக்குத் தந்த பெருஞ் செல்வம் பெரியபுராணம். பெரியவனைப் பற்றி மட்டுமல்ல, நாட்டின் செழிப்பு, மன்னன் ஆட்சிமுறை, வரலாறு, பக்தியின் அருமை, தமிழ்மொழியின் மாண்பு, சைவசமயத்தின் அருமை பெருமை, தெய்வீகக் காதல், அடியார்களின் பெருமை, பரம்பொருளின் பெருமை ஆகிய பல துறைகளும் அடங்கிய நூல் பெரிய புராணம் என்பதைக் காண்கிறோம்.

நமது ஆன்ம ஈடேற்றத்திற்கு உதவி செய்வது பெரியபுராணம். நாம் இந்த நூலைக் கசடறக் கற்கவேண்டும். பயன்பெற வேண்டும். வாழ்க சேக்கிழார், வளர்க சைவநீதி.

**நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவருக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்**



பேச்சுப்போட்டி
3ம் இடம்
தோ. துஸ்யந்தி



பேச்சுப்போட்டி
3ம் இடம்
கி. அபினயா

## சிறுவர் விருந்து

# அறிவை அறிவது அறிவு

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து!

விடுமுறைக் காலத்தை நல்லபடி செலவிடுங்கள். வீடு வளவு சுத்தத்தைக் கவனிக்கலாம். புதிதாக ஏதாவது பய னுள்ளவற்றைக் கற்றுக் கொள்ளலாம். சரி; இந்தக் கதையைக் கேளுங்கள்.

கல்கத்தாவில் உள்ள காளி கோயிலில் பூசை செய்யும் பணியில் ஸ்ரீ இராமகிருஷ்ணர் இருந்த ஆரம்ப காலத்தில் அவருக்கு உதவியாக இருதயர் என்ற இளைஞர் கிராமத்தி லிருந்து வந்திருந்தார். இருதயர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் மருமகன். சமைப்பது, தங்கியிருந்த இடத்தைச் சுத்தமாக வைத்திருப்பது, போன்ற கடமைகளைச் செய்து வந்தார்.

ஒரு நாள் அருகில் உள்ள ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை வந்தான். அவன் பதின்மவயதுச் சிறுவன். தன் சினேகிதரோடு தங்கள் தோட்டத்தில் கரும்பு வெட்டிச் சாப்பிட விரும்பி வந்திருந்தான். அறைக்குள்ளே திடீரென நுழைந்த அந்தச் சிறுவன் "மாமா" கத்தி தாருங்கள்!" என்று கேட்டான்.

"ஏன்?" என்று கேட்டார் இருதயர்.

"கரும்பு வெட்டப் போகிறேன், கத்தி தாருங்கள்" என்று அவன் கேட்டான்.

இருதயரும் கத்தியை எடுத்துக் கொடுத்துவிட்டார். கத்தியுடன் அந்தச் சிறுவன் வெளியே ஓடிவிட்டான். இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஸ்ரீஇராமகிருஷ்ணர்,

"இருதய! நீ யோசிக்காமல் கத்தியைக் கொடுத்துவிட்டாயே. அந்தப் பையன் அதைத் திருப்பிக் கொண்டுவந்து தரமாட்டான்.... பார்!" என்றார்.

மாமா! அவன் பணக்காரப் பிள்ளை. அவனுக்கு நமது கத்தி பெரிதில்லை... தேவைக்குக் கேட்டான். கொடுத்தேன். நிச்சயம் திருப்பித் தருவான் என்றார் இருதயர். "சரி பார்ப்போம்" என்று குறும்புடன் சிரித்தார் இராமகிருஷ்ணர்.

அன்றும், அதற்கு மறுநாளும் கூட அந்தப் பையன் அங்கே வரவில்லை. கத்தியைத் திருப்பித் தரவும் இல்லை. கத்தியில்லாமல் காய்கறி நறுக்கவும், பழங்கள் வெட்டவும் இருதயர் மிகவும் சிரமப்பட்டார். அடுத்தநாள் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அதே குறும்புச் சிரிப்புடன் கேட்டார்.

“என்ன இருதய்! உன் சிநேகிதன் திருப்பித்தந்த கத்தியை வைத்த இடத்தை மறந்துவிட்டாயா?”

இருதயர் வெட்கத்துடன் சொன்னார், “மாமா” அந்தப் பையன் மறுபடி இங்கே வரவே இல்லை, கத்தியைத் திருப்பித் தரவுமில்லை....”

ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொன்னார் நான் அப்பவே சொன்னேனே.... சரி சரி... நீ போய் அவன் கரும்பு வெட்டிய தோட்டத்தில் தேடிப்பார். கத்தி கிடக்கும். இருதயர், அந்தப் பணக்காரின் தோட்டத்துக்குப் போனார். காவற்காரனிடம் அனுமதி பெற்று உள்ளே போய்க் கரும்பு வெட்டிய இடத்தைக் கண்டுபிடித்து, அங்கே தேடிப் பார்த்தார். சற்றுத் தள்ளி ஓரிடத்தில் கத்தி கிடந்தது. நிம்மதியுடன் எடுத்துக் கொண்டு வந்து, மாமனாரிடம் காட்டினார்.

“மாமா! இதோ கத்தி. அந்தத் தோட்டத்திலே, கரும்புப் புதரிலே தான் கிடந்தது... எடுத்துவந்தேன்” என்றார்.

“சரி சரி! நல்லது” என்றார் இராமகிருஷ்ணர்.

அவன் திருப்பித் தரமாட்டான் என்று எப்படி முன்பே கண்டுபிடித்தீர்கள்! என்று வியப்புடன் கேட்டார் இருதயர்.


அந்தப் பையன் இங்கே வந்தபோது நின்ற தோரணையும் தோற்றமுமே ஒரு பொறுப்புமில்லமால் வளர்ந்த பிள்ளை, எதையும் சரியாகச் செய்ய மாட்டான் என்பதைச் சொல்லிவிடடனவே....

அவனது தலைமயிரின் கோலம், மேலே போடவேண்டிய பொத்தானைப் போடாமல் கீழே உள்ள பொத்தானை அலட்சியமாக மேலே போட்டிருந்த சட்டை எல்லாமே அவனது ஒழுங்கில்லா பழக்கவழக்கத்தைச் சொல்லி விட்டனவே.....” என்று சிரித்தார் இராமகிருஷ்ணர்.

ஒருவரின் இயல்பை அவரது நடை உடை பாவனையே காட்டிக் கொடுக்கும் என்ற உண்மை இருதயருக்கும் விளங்கியது.

தான் இன்னும் அறிவதற்கு நிறைய உண்டு என அவர் எண்ணிக் கொண்டு, “இனிக் கவனமாய் இருப்பேன் மாமா” எனப் பணிவாகப் பதில் சொன்னார்.

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் - 2016

## ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

## அவர்களின்

## 91 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில்


## கௌரவம் பெறும் பெருமக்கள்

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

*07-01-2016*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்**
**அறநிதியச் சபை,**

# கரவெட்டி மூதறிஞர் உரையாசிரியர் உயர்திரு. க.கணபதிப்பிள்ளை அவர்கள்



அகவை தொன்னூற்றி இரண்டு பூர்த்தி நிலையை எய்திய சைவப்பெரியார் கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்க்குடில் முடக்காடு நெல்லியடி கிழக்கு கரவெட்டியை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். இவர் 36ஆண்டுகள் ஆசிரியத் தொழிலை மிகவும் புனிதமாக மேற்கொண்டவர். இவரது சைவத்தமிழ்ப்பணி ஓய்விற்கு பின்னரே ஏற்பட்டதாக குறிப்பிடுகின்றார். பதவுரை விளக்க உரையுடன் கந்தபுராணம் யுத்தகாண்டத்திற்கு (1922 செய்யுள்கள்) உரை எழுதியுள்ளார். இவ்வுரைக்கு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும் இலக்கியகலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்களும் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். சிங்கமுகாசுரன், சூரபத்மன் வதைப்படலங்கள் நீங்கலாக யுத்த காண்டத்திற்கு இதுவரை எவரும் உரை எழுதாமையால் இவரது உரை நூல் முதன்மை சிறப்பு பெறுகிறது எனலாம். மேலும் இவர் கோணமலை அந்தாதி, கல்வி, ஒழுக்கம் (ஔவையார்) வல்லிபுரமாயன் கோவை, தெகிவளை நெடுமால்கோவை, நயினை நாகபூசணி அம்மன் பிள்ளைத்தமிழ், கணகை விநாயகர் பிள்ளைத்தமிழ், சரஸ்வதி அந்தாதி, நன்னெறி முதலிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

இவர் செய்யுள் யாப்புகளாக இவரது ஊர்க்கோயிலான தஞ்சை சிலேடைவெண்பா, திருச்செந்தூர் சிலேடைவெண்பா, திருமலை சிலேடை வெண்பா (கோணேஸ்வரம்) ஆகியவற்றையும் அந்தாதி, யார்க்கருஅந்தாதிஇ கல்யாணவேலவர் பிள்ளைத்தமிழ் மற்றும் பல திருவூஞ்சல் பாக்களையும் ஆக்கியுள்ளார். இவரது இன்னொரு பணி ஆய்வு நூல்களாகும். இவற்றில் குறிப்பிடத்தக்கவை: மணிவாசகர் வரலாறு (ஓர் அகச்சான்று கண்ணோட்டம்) இது சாகித்திய மண்டலப் பரிசில் பெற்றது. இவரது இன்னோர் ஆய்வுக்கட்டுரை திருமுறைகளில் கோணேஸ்வரம் இக்கட்டுரை 1983இல் நிகழ்ந்த கோணேஸ்வரப் பெருமானின் குடமுழுக்கு மலரில் வெளிவந்தது. கோணேஸ்வர ஆதீனத்தின் செயலாளர் திரு.அருள்சுப்பிரமணியம் என்பவரால் தொகுக்கப்பட்ட நூல் திருக்கோணேஸ்வரம் என்பதாகும். கோணேஸ்வரத்தைப் பாடியவர் திருஞானசம்பந்தர் மட்டுமல்லாது அப்பர், சுந்தரர் ஆகிய இருவரும் வைப்புத்தலங்களாக பாடியுள்ளனர் என்ற தனது கருத்தை இக்கட்டுரையில் காட்டியுள்ளார்.

தனது தமிழ்ப்புலமையால் இவ்வாறான நூல்களை ஆக்கிய பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவராகின்றார். இவர் மிகுந்த இசைஞானம் உடையவர். திருமலையில் ஆசிரியப்பணி செய்த போது 1968இல் இவரது தேவாரம் கேட்டு காஞ்சிபுரம் திருஞானசம்பந்த மடாதிபதி ஞானப்பிரகாச சுவாமிகளால் பாராட்டப்பட்டவர். மேலும்

ஓவியக்கலையிலும் தேர்ந்தவராக விளங்கினார். இவரது தமிழ்ப்பணிக்காக இவர் பெற்ற **கௌரவங்களும் விருதுகளும்**

"செந்தமிழ்ச்செல்வன்"– திருமுருக கிருபானந்த வாரியார்

"சிலேடைக்கவிரத்தினம்"–இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

கலாபூசணம்– 2010

சாகித்திய மண்டல விருது– (மணிவாசகர் வரலாறு)

வடமாகாண ஆளுனர் விருது.

இவ்வாறாக தமிழ்ப்பணியாற்றிவரும் பெரியார் கணபதிப்பிள்ளை அவர்களை "சிவத்தமிழ் செல்வி விருது" வழங்கி கௌரவித்து மகிழ்கின்றோம்.

## மல்லாகம்

# திருமதி. பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்கள்

## (இளைப்பாறிய ஆசிரியர்)



7ம் கட்டை ஒழுங்கை மல்லாகத்தை பிறந்த இடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பாலாம்பிகை கல்வி வித்தியாதிகாரியாக கடமை ஆற்றிய தெல்லிப்பழை அருளம்பலம் சரவணமுத்து. மல்லாகம் இராசம்மா பொன்னம்பலம் தம்பதியினருக்கு மகளாக 31.07.1930 இல் ,பிறந்தார். ஆரம்பக் கல்வியை மல்லாகம் யா/விசாலாட்சி வித்தியாசாலை, ஆங்கில மொழி மூலம் மாத்தளை பாக்கியம் வித்தியாசாலை என்பனவற்றிலும் பம்பலப்பிட்டி HOLY FAMILY CONVENTலும் இடைநிலைக்கலவியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் உயர்கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும் கற்றார். உயர் பட்டப்படிப்பை பெங்களூர் மகாராணி கல்லூரியிலும் கற்று விஞ்ஞானப் பட்டதாரியானார். ஆசிரியராக கண்டி மகாமாயாக் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசலைகளில் ஆசிரியராக பணியாற்றினார். பலாலி ஆசிரியகலாசாலை அதிபராக விளங்கிய கல்விமான் மயிலிட்டி சுவாமிநாதன் பூதாதைபிள்ளை தம்பதியின் புதல்வன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களை திருமணம் செய்து கொண்டார்.

ஆசிரிய சேவையிலிருந்து 1985 இல் ஓய்வு பெற்றபின்னர் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். மல்லாகம் கிராம அபிவிருத்தி மாதர் பிரிவு செயலாளராக 1990 வரை செயற்பட்டார். துர்க்காதேவி தேவஸ்தான பெண்கள் தொண்டர் சபையில் அங்கத்துவராக இணைந்து இணைசெயலாளராகவும், உபதலைவராகவும் பதவிகள் வகித்து தற்போதைய

தலைவராகவும் விளங்குகின்றார். மேலும் மல்லாகம் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பதவிவகிக்கின்றார். 2000–2003 வரையான காலப்பகுதியில் வலிவடக்கு பிரதேச சபையின் கௌரவம்மிக்க தவிசாளர் பதவியை வகித்த பெருமை இவருக்கு உண்டு. தெல்லிப்பழை மல்லாகம் அரிமாக்கழக அங்குரார்ப்பண நிகழ்வில் முதல் தலைவரபக தெரிவு செய்யப்பட்டு Chartered presidentஆக விளங்குகின்றார். கணவரின் அரசியல் சமூக செயற்பாடுகளில் பக்கபலமாக நின்று உதவினார்.

எமது மகளிர் இல்லப் பிள்ளைகளின் நலனை முன்னிட்டு நிரந்தர வைப்புக்களை வைப்பிலிட்டுள்ளார். பொது வாழ்வில் தம்மை ஈடுபடுத்தி வாழ்ந்து வரும் திருமதி. பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவித்து மகிழ்கின்றோம்.

## மூத்த பெண் எழுத்தாளர் இலக்கியவித்தகி திருமதி பத்மா.சோமகாந்தன் அவர்கள்



திருமதி.பத்மா.சோமகாந்தன் அவர்கள் பிரம்ம ஸ்ரீ.ஏரம்பக் குருக்கள் பஞ்சநதீஸ்வரக்குருக்கள்– ஸ்ரீமதி அமிர்தம்மாள் தம்பதிகளுக்கு மகளாக 1934.05.03இல் பிறந்தார். ஆங்கில மொழி மூலம் சிரேஸ்ட பாடசாலை தராதரப்பத்திரம், பயிற்சி பெற்ற ஆசிரிய தராதரம் பாலபண்டிதர், ஆகிய கல்வித்தகைமைகளைக் கொண்ட இவர் ஆங்கில உதவி ஆசிரியராக, பின்னர் அதிபர் தரம்1க்கு உயர்ச்சி பெற்றார். இலங்கை அரசாங்க பாடசாலைக்கான பாடநூல்கள் (சமயம்) எழுதுபவராகவும் ஆலோசகராகவும் பணி புரிந்ததோடு கொழும்பு தெற்கு பாடசாலைகளுக்கு சமய ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

எழுத்தாளராக பரிணமித்த இவர் பல நூல்களை எழுதி ஈழத்து பெண் எழுத்தாளர் வரிசையில் பேசப்படுபவராக விளங்கினார். இந்து மகளிர் கல்லூரியில் மாணவியாக இருந்தபோதே சுதந்திரன் பத்திரிகை முதன் முதல் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றார். நூல் வடிவில் வெளியான இவரது ஆக்கங்களாவன **கடவுளின் பூக்கள்** சிறுகதைத்தொகுதி சென்னை வில்லிதேவ சிகாமணப் பரிசினைப் பெற்றதுடன் சிங்கள மொழி பெயர்ப்பிலும் வெளியானது **"சார்க்"** பெண்கள் பரிசினைப்பெற்ற புதிய **வார்ப்புக்கள், சுவாமி சிந்மயானந்தர் வாழ்க்கை வரலாறு** பற்றி முதன்முதலாக தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல். இலங்கையில் பல துறைகளிலும் முன்னணி பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் பற்றிய நூலாகிய **ஈழத்து மாண்பு மகளிர்** வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அமைச்சின் பரிசையும் பாராட்டையும் பெற்றதோடு இலங்கை இலக்கிய பேரவையின்

பரிசினையும் பாராட்டையும் பெற்றது. சைவ சமயக் கதைகளை வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும். எமது பிள்ளைகளின் கற்றலுக்காக **'stories from hindu mythology'**, **நெஞ்சுக்கு நிம்மதி பதில் தருகிறார் பத்மா. பாராமுகங்கள் சில பார்வைகள்** (இவை இரண்டும் இளம் பிள்ளைகளுக்கான ஆலோசனைகள் கேள்வி பதில் வடிவில் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் அவற்றை வெளியிடுவதிலும் இவரது பணி குறிப்பிடத்தக்கதாகும். **பெண்ணின் குரல்** என்ற காலாண்டிதழின் ஆசிரியராகப் பதினொரு வருடங்கள் பணியாற்றியுள்ளார்.

சொல் என்ற பெண்களுக்கான சஞ்சிகையின் சில இதழ்களின் ஆசிரியராக வெளிக்கொணர்ந்தார். கொழும்புதமிழச்சங்க இதழான **சங்கத் தமிழ்** என்பவற்றிற்கு ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். **அகவிழி** ஆசிரியவாண்மைக்கான இச்சஞ்சிகையின் ஆசிரிய பீடத்தில் ஒருவராக உள்ளார்.

பெண்கள் மேம்பாடு தொடர்பாகவும் கல்வி இலக்கியம் சம்பந்தமான உரையரங்குகள் கருத்தரங்குகள் பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றிற்கு வளவாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் மேற்கொண்ட ஆய்வுகள் சார்பாக சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் தொடர்பாக இடம் பெற்ற ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் 1ம் பரிசாக தங்கப்பதக்கத்தை பெற்றுக்கொண்டார். அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற இந்துமகா நாட்டில் வேதகாலம் தொட்டு நவீனகாலம் வரையான இந்துப்பெண்கள் பற்றிய ஆய்வரங்கில் நவீனகாலம் பற்றி ஆய்வினை மேற்கொண்டார். 2011இல் கொழும்புத்தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற சர்வதேச இலக்கிய மகாநாட்டில் குழந்தை இலக்கியத்தின் இன்றைய நோக்கு என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தார்.

## பாராட்டுகளும் விருதுகளும்

1. மாலன்திசை அமைப்பு சார்பில் இடம்பெற்ற மகளிர்தின விழாவில் இலங்கையில் மூத்த பெண் எழுத்தாளர் என்ற கௌரவிப்பு.
2. அகில உலக சிற்றிதழ் சங்கத்தால் 2011இல் ஒளவை இலக்கிய விருது.
3. இவரது இலக்கிய பொன் ஆண்டை முன்னிட்டு கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகராலயத்தால் இலக்கிய கலாவித்தகி என்ற பட்டம் வழங்கி கௌரவித்தமை.
4. 2015இல் இந்து கலாச்சார அமைச்சர் கலாபூசணம் விருது பெற்றுள்ளார்.

ஆசிரியராக இலக்கியப் பணியில் எழுத்தாளராக, ஆய்வாளராக, வளவாளராக, சிறப்பு பெற்று விளங்கும் மூத்த பெண் எழுத்தாளர் திருமதி.பத்மா. சோமகாந்தன் அவர்களை கௌரவித்து இவ்வாண்டிற்கான சிவத்தமிழ் விருது வழங்கி மகிழ்கின்றோம்.

## மயிலிட்டி

# மிருதங்க வித்துவான் திரு.க.ப.சின்னராசா அவர்கள்



16 வயதில் தனது கலைப்பணியை ஆரம்பித்த மிருதங்க வித்துவான் க.ப.சின்னராசா அவர்கள் மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி மருதனார்மடத்தை வதிவிடமாகக் கொண்டவர். இவர் தனது கல்வியை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் பெற்று தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிரேஷ்ட பாடசாலை தராதரத்தைப் பெற்றுக்கொண்டார்.

மிருதங்ககலையில் மீதிருந்த ஈடுபாடு காரணமாக அவரது குருநாதர் திரு.ஏ.எஸ்.ராமநாதன் அவர்களிடம் மிருதங்கத்தை கற்றுக்கொண்டார். வட இலங்கை சங்கீதசபை நடாத்திய மிருதங்க பரீட்சையில் முதலாவது மாணவனாகச் சித்தி பெற்றார். 1974இல் இராமநாதன் அக்கடமி நடாத்திய சங்கீத இரத்தினம் டிப்ளோமா பரீட்சையில் சித்தி பெற்றார். மிருதங்க கலையில் தேர்ச்சி பெற்று 1976-2008 வரையான காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர்கலாசாலையில் மிருதங்க விரிவுரையாளராகவும் யாழ் நுண்கலைப்பீடம் வட இலங்கைச்சபை அறிமுறைத்தேர்வு பரீட்சகராகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை வானொலி தாள வாத்தியக்கலைஞராகவும் இருந்துள்ளார். இவர் யாழ் மாவட்டத்தில் உள்ள இசைக்கலை மன்றங்களான தெல்லிப்பளை பாலர் ஞானோதயசபை, ஞானசம்பந்தர் கலை மன்றம் பருத்தித்துறை, யாழ் ரசிகரஞ்சன சபா யாழ்ப்பாணம், இணுவில் இசை நடனக் கிராமிய கலைக்கல்லூரி, மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றம், அளவெட்டி தொண்டர் சபை, குரும்பசிட்டி சண்மார்க்கசபை, சங்கானை கலைமன்றம் இணுவில் இளந்தொண்டர் சபை என்பனபற்றில் மிருதங்க கலையை பயிற்றுவித்து எண்ணற்ற மாணவர்களை உருவாக்கியுள்ளார். இவரால் பயிற்றப்பட்ட சுமார் 39 மாணவர் அரங்கேற்றியுள்ளனர். நூறுக்கும் அதிகமான மாணவர்கள் ஆசிரிய தரம் பெற்றுள்ளனர். இவர் தன்னிடம் பயின்ற மாணவர்கள் ஆசிரியர்களாகவும் பொறியியலாளராகவும் வைத்தியர்களாகவும் விரிவுரையாளர் களாகவும் இருந்து கொண்டு மிருதங்க கலையையும் வளர்த்து வருவது குறித்து மிகவும் பெருமைப்படுகின்றார்.

எங்கள் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.வா.அகிலேஸ்வரக் குருக்கள் பாலர் ஞானோதய சபையில் இவரிடம் மிருதங்கத்தை பயின்றதை நினைவு கூர்ந்து கௌரவிப்பு குறித்து தாம் பெருமை கொள்வதாக குறிப்பிடுகின்றார். விநாயக மகத்துவம்(ஒலி நாடாவுடன்) பல்லவி அமுதம் (ஒலி நாடாவுடன்) ஆகிய இரு நூல்களை இயற்றி வெளியிட்டார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**இவர் பெற்ற கௌரவங்களும் விருதுகளும்**

மத்தளங்கலைச்சுடர் (கொழும்பு 1969)
லயஞான பானு (பாலர் ஞானோதயசபை 1978)
லயஞான சுரபி (இளந்தொண்டர் சபை 1998)
கலாபூசணம் (இலங்கை அரசு 1998)
கலைஞான கேசரி (இந்து கலாச்சார பேரவை 2001)
லயஞான கலாபமணி (கொழும்பு சர்வதே இந்துமத குருபீடம் – 2002)
கலைச்சுடர் (வலி வடக்கு கலாச்சார பேரவை 2006)
ஆளுநர் விருது (2009)

65ஆண்டகளாக கலைப்பணியாற்ற வரும் மூத்த மிருதங்கக் கலைஞர் க.ப.சின்னராசா அவர்களை இவ்வாண்டிற்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவித்து மகிழ்கின்றோம்.

மானிப்பாய்

# செல்வி. இராஜேஸ்வரி சுப்பையாபிள்ளை அவர்கள்

### இளைப்பாறிய நூலகர் – மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்கம்



மானிப்பாயைச் சேர்ந்த செல்வி. இராஜ ராஜேஸ்வரி சுப்பையா பிள்ளை அன்னம்மா தம்பதிக்கு மகளாகப் பிறந்தார். தனது கல்வியை மானிப்பாய் சோதி வேம்படி பாடசாலையில் கற்றுக் கொண்டார். பின்னர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கற்று அக் கல்லூரியில் ஆசிரியராகவும், நூல் நிலையப் பொறுப்பாள ராகவும் பணிபுரிந்தார்.

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம் 1957ம் ஆண்டு உள்நாட்டு அமைச்சு நிரந்தரச் செயலாளர் திரு.மு.வைரமுத்து அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. மானிப்பாயை அண்டிய சண்டிலிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை ஆகிய கிராமங்களை இணைத்து இச் சங்கம் உருவானது. நாவலர் குருபூசை, கூட்டுப் பிரார்த்தனை எனபன சிறப்பாக நடாத்தப் பட்டன. பின்னர் இச் சங்கம் மானிப்பாய் கோவில் பற்று இந்து சமய விருத்திச் சங்கம் எனப் பெயர் பெற்று சைவசமயம் சார்ந்த செயற்பாடுகளை நடாத்தி வந்தது. இவ்வரு சங்கங்களிலும் செல்வி.சுப்பையா பிள்ளை அவர்கள் செயலாளராகவும், தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சூழ்நிலை காரணமாக தளர்வடைந்திருந்த இச் சங்கத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 35 வருடங்களாக தடைப்பட்டிருந்த பண்ணிசை வகுப்புக்கள் வடமாகாண

சங்கீத சபை நடாத்திய பண்ணிசை பரீட்சைகளில் மாணவர்களை சித்தி பெறச்செய்வதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இக்காலத்தில் இவரது முயற்சியால் அறநெறிப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்தின் நூலகப் பொறுப்பாளராக ஓய்வு பெறும் வரை கடமையாற்றினார்.

82அகவையைப் பூர்த்தி செய்து அமைதியான வாழ்வை மேற்கொண்டு வரும் செல்வி.ராஜராஜேஸ்வரி சுப்பையாபிள்ளை அவர்களை கௌரவித்து **சிவத்தமிழ்ச் செல்வி** விருது வழங்கி மகிழ்கின்றோம்.

## சிவத்தமிழ்ச்செல்வி அறக்கொடை வழங்கல் – 2016



## அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

- **யாழ். போதனா வைத்தியசாலை சிறுவர் விடுதிப் பிரிவு**
  **பெறுபவர் : வைத்திய நிபுணர் த. சத்தியமூர்த்தி அவர்கள்**
  ( பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலை )
- **சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்**
  ( தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற்கொண்டு, நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல் )
  **பெறுபவர் : திரு.சுப்பிரமணியம் சுந்தரசிவம் அவர்கள்**
  ( கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம் )

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
*தலைவர்*

**திரு.நா.தவநாதன்**
**திரு.மு.அருளையா**
*( இணைச் செயலாளர்கள் )*

**திரு.அ. சண்முகநாதன்**
*பொருளாளர்*

**திரு.ச. ஏழூர்நாயகம்**
*உப பொருளாளர்*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*
*07-01-2016*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் 55ஆவது பட்டமளிப்பு விழா கீரிமலை சிவபூமி மடத்தில் சிறப்பாக நடைபெற்றது. சைவநாதம்-5 மலர் வெளியீடும் இடம்பெற்றது.

**காரைநகர் மணிவாசகர் மடாலயம்**

பிரசித்தி பெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர வீதியில் அமைந்த மணிவாசகர் மடாலயம் புதிய மண்டபத்தை அமைத்து 13-12-2015 அன்று திறந்து வைத்தனர். ஈ.எஸ்.பி. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற விழாவில் அறக்கொடைச் செம்மல் சண்முகம் சிவஞானம் கௌரவிக்கப்பட்டார்.

**சிதம்பரம் நாவலர் பெருமான் சைவப்பிரகாச மேல்நிலைப்பள்ளி**

நல்லைநகர் நாவலர் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்ட சிதம்பரம் சைவப்பிரகாச மேல்நிலைப்பள்ளியின் 150வது ஆண்டு பூர்த்தி விழாவில் பாடசாலை மண்டபத்தில் நாவலர் பெருமானுக்கு உருவச் சிலை நிறுவப்பட்டு பாடசாலை முன்னாள் அதிபர் திரு.க.சுவாமிநாதன் திறந்து வைத்தார்.

**சேர். பொன் இராமநாதன் குருபூசை**

பரோபகாரி சேர். பொன். இராமநாதனின் குருபூசை 15-12-2015 அன்று யாழ். பல்கலைக்கழகத்திலும், இராமநாதன் கல்லூரியிலும் சிறப்பாக நடைபெற்றது.

**மட்டக்களப்பில் நாவலர் விழாவும் சைவ மகாநாடும்**

கிழக்கு இலங்கை இந்துப் பேரவை இந்து மன்றங்களின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்றம் நவம்பர் மாதம் முதல் வாரம் இரு நாட்கள் பெரு விழாவை நடாத்தினர். மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் சுவாமி விபுலானந்தர் இசைக் கல்லூரி வளா கத்தில் மேற்படி வைபவம் இடம் பெற்றது. பேரூர் ஆதீன தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ மருதாசலம் அடிகளார் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**பன்றித் தலைச்சியம்மன் பெருவிழா**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் வருடாந்த பெருந்திருவிழா 17-12-2015 ஆரம்பமாகி 26-12-2015 அன்று தீர்த்தத் திருவிழா வரை சிறப்பாக நடைபெற்றது.

**வல்லிபுர ஆழ்வார் கோவில் ஓதுவார் காலமானார்**

பிரசித்தி பெற்ற பருத்தித்துறை புலோலி வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நீண்டகாலமாக ஓதுவாராகப் பணி யாற்றிய ஸ்ரீமான் வைரமுத்து சோமசுந்தரம் 4-12-2015 காலமானார். இவர் பல வருடங்களாக இவ்வாலயத்தில் தொண்டுப் பணியாற்றியமை குறிப்பிடத் தக்கது.

**சென்னை வெள்ள நிவாரணப்பணி**

இந்தியாவிலுள்ள பல சைவ ஆதீனங்கள், மடாலயங்கள், சமய நிறுவனங்கள் மக்களுக்கு உதவினர். தர்மபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீன இணை முதல்வர்கள் நேரில் சென்று மக்களுக்கு உதவினர். சிதம்பர ஆலய தீட்சிதர்கள் ஒரு கோடி ரூபா பணம் சேர்த்து தமிழக அரசிடம் வழங்கினர்.

**திருக்கேதீஸ்வரத் திருப்பணி**

இந்திய அரசால் சுமார் 320 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப் பட்ட திருப்பணி வேலைகளின் முதல் கட்டுமானம் நடைபெற்று வருகிறது. ஆலய உள்வீதி மண்டபங்கள் இடிக்கப் பட்டு கருங்கற்களால் மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது. 2017ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**சிங்கப்பூர் தைப்பூச விழாவுக்கு விசேட அனுமதி**

சிங்கப்பூர் வாழ் சைவமக்களின் வேண்டுதலுக்கு அமைய சிங்கப்பூர் அரசு தைப்பூச விழாவில் தெரு ஊர்வலங்களில் மேளம் கரகாட்டம் இடம்பெற இவ்வாண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1973இல் தடை விதிக்கப்பட்ட தைப்பூச விழா வீதி ஊர்வலம் இம்முறை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பிரபஞ்ச இந்து சமுதாயத் தலைவர் ராஜன் ஜெட் அவர்களின் இடைவிடாத முயற்சியை மக்கள் பாராட்டியுள்ளனர்.

**குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள்**

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இம்மாதம் 17ஆம் திகதி ஆரம்பமாகி 25ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 26ந் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெற்றன.

**யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத்தின் நாவலர் விழா**

இம்மாதம் 27ஆம் திகதி இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் வேதநாதன் அவர்களின் தலைமையில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

**காரைநகர் சிவன் நுழைவாயில் கோபுரம்**

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு கோவளம் காரைநகரைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்களின் அனுசரணையில் புதிய நுழைவாயில் கோபுரம் அமைக்கப்பட்டு 06-12-2015 திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்

உ

துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

# துர்க்காதேவி வேதாகம பாடசாலை


# ஆரம்ப விழா அழைப்பிதழ்

**அன்புடையீர்!**

வணக்கம், துர்க்காதேவியின் திருவருளாலும், சிவாச்சாரியார்களின் ஆசியாலும், எமது தேவஸ்தானத்தில் எதிர்வரும் 24-01-2016 ஞாயிற்றுக்கிழமை தைப்பூச நன்நாளில் காலை 7.00 மணியளவில் வரும் சுபவேளையில் துர்க்காதேவி வேதாகமப் பாடசாலையை ஆரம்பிக்கவுள்ளோம். இவ் வைபவத்தில் தாங்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்**

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**







Print Master. T.P. : 021-205 3322